தனிப் பிரதி ரூ. 10/–
ஆண்டுச் சந்தா ரூ. 100/–
ஆயுள் சந்தா ரூ. 1000/–

Shalom

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்


மலர் : 12 இதழ் : 4 பிப்ரவரி – 2016

# எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்.

 லூக்கா 21:36



ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்



## 23.2.2016 அன்று பிறந்த நாள் காணும்

## பேராயர் தேவதாஸ் அவர்களை வாழ்த்துகிறோம்....

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

23.02.2016 அன்று 56வது பிறந்த நாளை காணும் நம் அன்பான **பேராயர் வே. தேவதாஸ்** அவர்களை அன்போடு வாழ்த்துகிறோம். இதுவரை நடத்திவந்த தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம், நம் பேராயர் அவர்களுக்கு தேவன் நல்ல சுகத்தையும், பெலத்தையும் தந்து ஊழியத்தில் வல்லமையாக பயன்படுத்துவாராக. அவர்களையும் அவர்கள் சந்ததியையும் கர்த்தர் பெருகப்பண்ணி, தேவன் அவர்களுக்குக் கொடுத்த தரிசனத்தையும் நிறைவேற்றுவாராக.

***Shalom Pastors & Bhil Evangelists, Sharing Love Mission,***
***Shalom Charity Mission & Shalom Diocese in India.***

## ஷாலோம் தலைமை அலுவலக & கிளை அலுவலக ஊழியர்கள் குடும்பக் கூடுகை - 2016

கடந்த 2.1.2016 அன்று காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை தூத்துக்குடி பெல் ஹோட்டலில் வைத்து, நமது ஷாலோம் தலைமை அலுவலக மற்றும் கிளை அலுவலக ஊழியர்களுக்கான புத்தாண்டு குடும்ப ஆசீர்வாதக் கூடுகை நடைபெற்றது. இதில் ஊழியர்கள் குடும்பத்துடன் கலந்துக் கொண்டார்கள். இக்கூட்டத்தில் பாடல் ஆராதனை வேளையை சகோ. ஒனேசி குழுவினர் நடத்தினர். அதன்பின்பு பிஷப். V. தேவதாஸ் அவர்கள் பணித்தளத்தில் கிறிஸ்துமஸ் நிகழ்வுகளைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள்.

பின்னர் சகோதரி. Dr. வஹிதா தேவதாஸ் அவர்கள் பணித்தளத்தில் 2015 ஆம் ஆண்டு நடைபெற்றப் பணித்தள ஊழியங்களைக்குறித்து விளக்கிக் கூறினார்கள். மேலும் ஊழிய தரிசனத் திட்டங்களை நிறைவேற்ற அர்ப்பணிப்பு ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, நம் பிஷப். V. தேவதாஸ் அவர்கள் சங்கீதம் : 128 : 5 ஆம் வசனத்தின் அடிப்படையில் வாக்குத்தத்த செய்தியைப் பகிர்ந்துக் கொண்டது அனைத்து ஊழியர்களுக்கும் மிக ஆசீர்வாதமாக இருந்தது. பின்னர் சகோ. கிளாட்சன் டைட்டஸ் அவர்கள் தனது அனுபவ சாட்சியினைப் பகிர்ந்து கொண்டார்கள். அதன்பின் அனைவருக்கும் அன்பின் ஐக்கிய விருந்து நடைபெற்றது. மதியம் ஷாலோம் முன்னேற்றப் பணியாளர்களுக்கென்று சிறப்பு கூடுகை நடைபெற்றது. தேவனுக்கே மகிமை!





**கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே!**

**ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பு வாழ்த்துக்களை ஷாலோம் பணித்தளத்திலிருந்து தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.**

தேவ கிருபையாலும் உங்கள் யாவரின் ஜெபங்கள் மற்றும் தியாகமான காணிக்கைகளினாலும் பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ஊழியங்கள் சிறப்பாக நடந்து வருகிறது. 2015 ஆம் ஆண்டில் தேவன் மிகப் பெரிய காரியங்களை நடப்பித்து தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தியுள்ளார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக! விசேஷமாக கிறிஸ்துமஸ் பண்டிகை நாட்களில், கட்டப்பட்ட அனைத்து தேவ ஆலயங்களும் நிரம்பி வழிந்தது மட்டுமல்ல பல ஆலயங்களில் 2 மடங்கு விசுவாசிகள், கிராம ஜனங்கள் என பங்குபெற்றார்கள். சில ஆலயங்களில் இடம் கொள்ளாதபடியால் ஆலயத்திற்கு வெளியில் பந்தல் போட்டு, கூடி ஆராதித்தார்கள். தேவன் பலுகிபெருகும் ஆசீர்வாதத்தை தந்தபடியால் தேவனை துதிப்போம்.

தேவ கிருபையால் 2015ம் ஆண்டில் 54 கிராம ஆலயங்களை கட்டி எழுப்ப தேவன் கிருபை தந்தார். அவற்றில் 40 கிராம ஆலயங்களை பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை பாராட்டினார். இதுவரை தேவ கிருபையால் 322 கிராம ஆலயங்களை கட்ட தேவன் உதவி செய்தார். இந்த வெள்ளி விழா (25ம்) ஆண்டில் 178 கிராமங்களை கட்டி எழுப்ப தேவன் கிருபை தர ஜெபியுங்கள் கிராம ஆலயங்களைக் கட்டி கொடுக்க சபையாக, குழுவாக, குடும்பமாக முன்வாருங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

மேலும், இந்த வெள்ளி விழா ஆண்டு இறுதிக்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள், 1000 ஸ்திர சபைகள், 3000 கிராமங்களில் விசுவாசிகள், 500 கிராம ஆலயங்கள் கட்டி முடிக்க தேவன் கிருபை பாராட்ட உங்கள் ஜெபங்கள் மற்றும் ஆதரவுகள் அதிகம் தேவை. விசேஷமாக குஜராத்தில் நம் **"ஷாலோம் பவன்"** பணித்தள அலுவலக கட்டிடம்; மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியாவில் ஷாலோம் பேராலயம்; இராஜஸ்தானில் ஷாலோம் நடுநிலைப்பள்ளி ( 1–8 வகுப்புகள்) கட்டிடங்கள் மற்றும் 200 மாணவர்களுக்கு விடுதி இவைகள் கட்டி எழுப்பப்பட ரூ. 300 இலட்சங்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள். குறிப்பாக ரூ. 1 இலட்சம் கொடுத்து இந்த வெள்ளி விழா திட்டங்களை நிறைவேற்ற 300 சிறப்பு ஆதரவாளர்கள் குடும்பமாக, குழுவாக, சபையாக எழும்ப ஜெபியுங்கள்.

தேவன் தந்த அழைப்பு, தரிசனத்தின்படி முழு பீல் மக்கள் இரட்சிப்பின் திட்டத்தை நிறைவேற்ற, 1000 சுதேச ஊழியர்கள், 1000 கிராம சபைகளை எழுப்புவது மட்டுமன்றி சுமார் 1 இலட்ச விசுவாச குடும்பங்களை புது வாழ்வுக்கு வழிநடத்தவும், சீஷர்களாக்கி ஆவிக்குரிய வாழ்க்கையில் நடத்தவும், வாலிபர்கள், சிறுவர்கள், மூப்பர்களுக்கு என சிறப்பு முகாம்கள் நடத்த சிறந்த தலைவர்களை எழுப்ப இம்மாபெரும் ஊழியத்தை கண்காணிக்க, பராமரிக்க அலுவலக

திட்டங்களுக்கான ஊழியர்களை எழுப்பவும் மாதந்தோறும் பல இலட்சங்கள் நிதி உதவி தேவைப்படுகிறது. குறிப்பாக ரூ. 500, ரூ. 1000 மாதந்தோறும் ஜெபித்து தாங்கக்கூடிய 1000 ஆதரவாளர்கள் உடனடியாக எழுப்பப்பட வேண்டும். ஆகவே, உங்கள் பிள்ளைகள், உடன்பிறந்தவர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கு ஷாலோம் மிஷனெரி பணிகளை அறிமுகம் செய்து புதிய ஆதரவாளர்களை இந்த வருடம் எழுப்ப (குறைந்தது 3 பேருக்காவது அறிமுகம் செய்து) உங்களை அன்புடன் வேண்டுகிறேன். மட்டுமல்ல ஷாலோம் ஊழிய பிரதிநிதியாக (Shalom Ambassadors) ஆக பணிபுரிய உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

தாகோத் பணித்தள அலுவலகம், முன்னேற்ற திட்டங்கள், Compassion Project, Sharon Memorial hospital, ஷாலோம் பள்ளிக்கூடம், ஷாலோம் விடுதி பணிகளுக்காகவும், தூத்துக்குடி தலைமை அலுவலகம் மற்றும் முன்னேற்ற பணிகளுக்காக விசேஷமாக ஷாலோம் ஊழியத்தில் பணிபுரியும் தேவ ஜனங்களுக்காக அனுதினம் ஜெபியுங்கள்.

குறிப்பாக எனக்கும், என் மனைவி வஹிதாவுக்கும் சுகம், பெலன் கிருபைகளை தந்து ஊழியங்களை நடத்தி செல்லவும்; உடன் ஊழியத்தில் நிற்கும் மூத்தமகன் **டைட்டஸ்** மற்றும் **மெர்லின் டைட்டஸ்** பேரன் **Zion Kryston** க்காகவும், ஜெபியுங்கள். இவ்வருடம் இறுதி ஆண்டு படிப்பில் நிற்கும் மகன் **ஷாலோம்** (M.A., Media) மருத்துவ படிப்பில் (6ஆம் ஆண்டு) ரஷ்யாவில் இருக்கும் எனது மகள் **ஜாய் ஷெக்கினாவுக்காகவும்** ஜெபித்துக் கொள்ளுங்கள்.

**"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்." ( எரேமியா: 33:3)**

இவ்வாக்கின்படி இம்மாதம் முழுவதும் தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக.

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் **V.** தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள : 09377445468 (குஜராத்)

## *முக்கிய அறிவிப்பு*

***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

நமது ஷாலோம் ஊழியத்தில் மும்பை கிளை அலுவலகத்தில் முன்னேற்றப் பணியாளராக ஊழியம் செய்து வந்த **சகோ. பிரபாகரன்** அவர்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக நம் ஷாலோம் ஊழியத்திலிருந்து விலகிக் கொண்டார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம். அவருக்குப் பதிலாக **சகோ. ஜேக்கப்** அவர்கள் மும்பை பகுதியில் பிரதிநிதியாக செயல்பட்டு வருகிறார் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஷாலோம் ஆதரவாளர்கள் மும்பையில் **சகோ. ஜேக்கப்** அவர்களை தொடர்புகொள்ள அன்பாய் கேட்கிறோம். தொடர்புக்கு : 09819554974



# ஜெபமே ஜெயம்



சிறப்புச் செய்தி : சகோதரி. **வஹிதா தேவதாஸ்**

**“ஜெபமே ஜெயம்! ஜெபம் மனிதனுடைய வாழ்க்கையை மறுரூபமாக்குகிறது! ஜெபம் தேசத்தை அசைக்கிறது! ஜெபம் தேசத்திற்கு ஷேமத்தை கொண்டு வருகிறது”.**

சுமார் 22 வருடங்களுக்கு முன்பாக **பாஸ்டர். பால் யாங்கிசோ,** கொரியா தேசத்தை சேர்ந்தவர்கள் 10 இலட்சம் அங்கத்தினர்களை கொண்ட சபையை உருவாக்கினவர்கள், கொரிய தேச எழுப்புதலில் பெரிய பங்கை பெற்றவர்கள் சென்னை பட்டணம் வந்து, தமிழ்நாட்டில் உள்ள பாஸ்டர்களுக்கென்று விசேஷ கருத்தரங்கு நடத்தினார்கள். இந்த கருத்தரங்கில் குடும்பமாக பங்கு பெற்றோம். அப்பொழுது அவர்கள் கூறிய காரியம், கொரியா தேசத்தின் எழுப்புதலுக்கு காரணம் என்னவென்று அறிய வாஞ்சையோடு இருக்கிறீர்கள் அல்லவா? என்னுடைய பதில் ஒன்றே ஒன்றுதான். அது ஜெபம், ஜெபம் தான் கொரியாவில் எழுப்புதலை கொண்டு வந்தது என்று பிரசங்கித்தார்கள். மறுநாளில் என்ன செய்தி கொடுப்பார்கள் என்று ஆவலோடு காத்திருந்தவர்களுக்கு அவர்கள் கொடுத்த செய்தி ஜெபம் தான். மூன்றாவது நாளில் ஜெபத்தை குறித்தே பேசி கருத்தரங்கு முடிவு பெற்றது. அந்த கருத்தரங்கில் ஜெபத்தை குறித்த காரியத்தில் என்னைத் தொட்ட காரியம் என்னவென்றால், கொரியாவில் உள்ள பாஸ்டர் பால்யாங்கி சோ அவர்கள் சபையில் உள்ள சாதாரணமான விசுவாசிகளும் சிறுகுழந்தைகளும் தினமும் ஒரு மணி நேரம் ஜெபிப்பார்களாம். மட்டுமல்லாமல், அவர்கள் சபையில் உள்ள உதவி பாஸ்டர்கள் 800 பேர் தினமும் மூன்று மணி நேரம் ஜெபிப்பார்களாம். தலைமை போதகரான பால்யாங்கி சோ அவர்கள் தினமும் ஏழு மணி நேரம் ஜெபிப்பார்களாம். இந்தக் காரியம் என்னுடைய ஜெப வாழ்க்கையில் ஒரு எழுப்புதலை கொண்டு வந்தது. அந்த நாளிலிருந்து என்னுடைய ஜெப வாழ்க்கை மாறியது. ஒரு விண்ணப்பத்தின் ஆவி ஊற்றப்பட்டது. அதே காரியத்தை பீல் மக்கள், விசுவாசிகளுக்கும் அறிவித்து ஜெபித்தபோது, ஷாலோம் சபைகளிலும், படிப்பறிவில்லாத ஆண்கள், பெண்கள் மற்றும் சிறுவர்கள், வாலிபர்கள் எல்லார் மேலும் ஒரு ஜெப விண்ணப்பத்தின் ஆவி ஊற்றப்பட்டது. வெகு விரைவில் சபை வளர்ச்சியை கண்டோம்.

இப்பொழுதும், ஜெபத்தைக் குறித்து 4 காரியங்களை தியானிப்போம். **தனி ஜெபம், குடும்ப ஜெபம், நண்பர்கள் ஜெபம், சபையார் ஜெபம்.** ஜெபம் ஜெயத்தை கொண்டு வரும். எழுப்புதலை கொண்டு வரும்.

**தனி ஜெபம் :** இயேசுவை அறிந்த நாம் யாவருக்கும் தனி ஜெபம் அவசியம், அதிகாலையிலே எழும்பி தேவனுடைய சமூகத்தில் தனியாக அமர்ந்திருந்து உறவாட வேண்டும். தனிப்பட்ட முறையில் நமக்கும் தேவனுக்கும் ஒரு சம்பந்தம் வேண்டும். தனிப்பட்ட முறையிலான உறவு இல்லையென்றால், நாம் கிறிஸ்துவை உடையவர்களாக இருக்க முடியாது. தனி ஜெபம் தனிப்பட்ட

மனிதர்களுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது. உதாரணமாக, ஆதி 32:24–ல் பாருங்கள் யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான். அப்பொழுது தேவன் அவனோடு உறவாடினார். ஆதி 32. 26–29 வசனத்தில் யாக்கோபு, நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மை போகவிடேன் என்று கூறி, தேவனோடு தனியாக போராடி ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்டான். ஆம் பிரியமானவர்களே, ஆசீர்வாதம் என்றால் எல்லோருக்கும் ஆசை தான். ஆனால் தனியாக ஜெபிக்க வேண்டுமென்றால் நேரம் இல்லை என்பார்கள். தனி ஜெபம் தான் மனிதனுடைய வாழ்க்கையில் ஆசீர்வாதத்தைக் கொண்டு வருகிறது.

அடுத்தபடியாக, தனி ஜெபத்தில் தேவனுடைய வழிநடத்துதல் கிடைக்கும். ஆதி 24:7ம் வசனத்தில் ஆபிரகாம் தன்னுடைய குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் கொண்டுவரும்படிக்கு, தன்னுடைய ஊழியக்காரரான எலியேசரிடம் கூறுவதைப் பார்க்கிறோம். தேவன் தம்முடைய தூதனை உனக்கு முன்பாக அனுப்புவார் என்று கூறி, காரியத்தை எலியேசரிடம் ஒப்புக் கொடுப்பதை பாருங்கள். எப்படி தன்னுடைய ஒரே குமாரனுக்கு பெண் பார்க்கும் காரியத்தை தன்னுடைய ஊழியக்காரரின் கையில் ஒப்புக் கொடுக்க முடியும் என்று நினைத்தால் மிக ஆச்சரியமாக உள்ளது. ஆனாலும், உண்மை என்னவென்றால் எலியேசர் கர்த்தருக்குப் பயந்தவன். கர்த்தரை முன்பாக நிறுத்தி ஜெபிப்பவன் என்பதை ஆபிரகாம் அறிந்திருந்தான். ஆதி 24 : 11,12. இந்த காரியத்தை ஆபிரகாம் கூறின உடனே, எலியேசர் தனக்குள்ளே ஜெபிக்க ஆரம்பித்தான். என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தேவனாயிருக்கிற கர்த்தாவே இன்றைக்கு நீர் எனக்கு காரியம் சித்திக்கப்பண்ணி என் எஜமானாகிய ஆபிரகாமுக்கு தயவு செய்தருளும் என்று தனியாக ஜெபிக்கிறான். ஆதி 24:45–ல் இதை தன் இருதயத்தில் சொல்லி முடிக்குமுன்னே ரெபெக்காளை காண்கிறான். ஆதி24:48 ம் வசனத்தில் மறுபடியும் தலைகுனிந்து கர்த்தரை பணிந்து கொண்டு என்னை நேர்வழியாய் நடத்தி வந்த என் எஜமானாகிய ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்.

ஆம் பிரியமானவர்களே! தனி ஜெபம் நம்மை கர்த்தருடைய வழியில் நடத்தும், நேர் வழியில் நம்மை நடத்தி செல்லும். நம் வாழ்க்கையில் எந்த காரியமானாலும் நாம் தனியாக ஜெபிக்கும்போது கர்த்தரால் வழிநடத்தப்படுவோம்.

**குடும்ப ஜெபம் : "குடும்ப ஜெபம் இல்லாத வீடு கூரையில்லாத வீடு"** என்பது வழக்கச் சொல். அது உண்மை. குடும்ப ஜெபம் தான் குடும்பத்தைக் கட்டும். பாதுகாக்கும். இரட்சிக்கும்.

ஆதியாகமம் 6:9–ல் நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும், உத்தமனுமாயிருந்தான். நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான். ஆதியாகமம் 6:18–ல் உன்னுடனே என் உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். நீயும் உன்னோடே கூட உன் குமாரரும், உன் மனைவியும் உன் குமாரரின் மனைவிகளும் பேழைக்குள் பிரவேசியுங்கள். ஆதியாகமம் 7:1–ல் இந்த சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன். பாருங்கள் தேவன் பூமியை அழிக்க இருந்த திட்டத்தில் அந்த நாட்களில் இந்த சந்ததியில் நோவாவின் முழு குடும்பம் பாதுகாக்கப்பட்டது. நோவா மட்டுமல்லாமல், அவன் குடும்பத்தாரும் கர்த்தரை குறித்த அறிவை பெற்றிருந்தார்கள். குடும்பமாய் விசுவாசித்திருந்தார்கள். எந்த

பிள்ளையோ, மருமக்களோ, மனைவியோ எதிராகப் பேசவில்லை. காரணம் குடும்பமாக கர்த்தரை சேவித்தார்கள். நோவாவின் வார்த்தையை ஏற்றுக்கொண்டார்கள். ஆகையால் கர்த்தர் முழுக்குடும்பத்தையும் பாதுகாத்தார். இன்னும் கூட, உலகத்தில் என்ன நடந்தாலும், சுனாமியோ, பூமி அதிர்ச்சியோ, விஷக்காய்ச்சலோ, தீவிரவாதமோ, எந்த பயமோ வந்து நெருக்கினாலும் நீங்கள் குடும்பமாய் ஜெபித்து தேவனை தொழுது கொண்டால், உங்கள் குடும்பம் முழுவதும் பாதுகாக்கப்படும்.

அடுத்தப்படியாக யோபு 1:5–ல் பார்க்கிறோம். யோபு தன் குடும்பத்திற்காகவும், பிள்ளைகளுக்காகவும், தகனபலிகளை செலுத்தியுள்ளான் என்பது தெரிகிறது. யோபு தன்னுடைய குமாரர் ஒரு வேளை பாவம் செய்து, தேவனை தங்கள் இருதயத்திலே தூஷித்திருப்பார்கள் என்று சொல்லி அவர்களை அழைத்தனுப்பி, பரிசுத்தப்படுத்தி, அதிகாலமே எழுந்து, அவர்கள் எல்லாருடைய இலக்கத்தின்படியேயும் சர்வாங்க தகனபலிகளை செலுத்துவான். இந்தப் பிரகாரமாக யோபு அந்நாட்களிலெல்லாம் செய்து வருவான்.

குடும்பமாக பிள்ளைகளுக்காக, யோபு மன்றாடினதை பாருங்கள். யோபு ஒரு நல்ல தகப்பன். யோபுவை குறித்து கர்த்தரே சாட்சி கொடுக்கிறார். கர்த்தர் பிசாசிடம் சவால்விடுகிறார். என் தாசன் யோபு, உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்தவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன், அவனைப் போல் பூமியில் ஒருவனும் இல்லை என்றார்.

யோபு தன் குடும்பத்திற்காக, குடும்பமாக பலிகளை செலுத்தினவன். அவன் குடும்பத்தில் வந்த பெரிய சத்துருவின் போராட்டத்திலிருந்து அவன் வெற்றி பெற்று, இரட்டத்தனையான ஆசீர்வாதத்தைப் பெற்றான். பிரியமான தேவ பிள்ளைகளே, இந்தக் காலத்தில் கிறிஸ்தவர்கள் கூட, பிசாசின் போராட்டம் என்றும், பில்லிசூனியம் என்றும் மிகவும் பயந்து நடுங்குகிறார்கள் ஏன்? குடும்பத்தில் தவறாமல் குடும்ப ஜெபம் ஏறெடுத்தால், பிசாசின் மேல் வெற்றியை மேற்கொண்ட யோபுவை போல நாமும் வெற்றி பெறலாமே.

அப் : 10:2–ல் கொர்நேலியு குடும்பத்தை பாருங்கள். அவன் தேவ பக்தியுள்ளவனும், தன் வீட்டாரனைவரோடும் கூட தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களை செய்து எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான்.

வீட்டாரனைவரோடும் கூட தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக் கொண்டிருந்தான். அவனுடைய ஜெபம், தருமங்கள் தேவசந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது. ஆகையால் தேவன் தம்முடைய ஊழியக்காரரான பேதுருவை அனுப்பி அவர்களுடைய முழு குடும்பத்தையும் இரட்சித்தார், அபிஷேகித்தார், மட்டுமல்லாமல், (அப்: 10:24) கொர்நேலியுவின் உறவின் முறையாரையும், அவனுடைய விஷேசித்த சிநேகிதரையும் வரவழைத்து ஜெபித்தான். அந்த நாளிலே பேதுரு மூலமாக அனைவரும் இரட்சிப்பையும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஆகவே நாம் குடும்பமாக ஜெபிக்கும் போது நமது குடும்பம் இரட்சிக்கப்படுவது மட்டுமல்லாமல், நமது உறவினர்கள், சிநேகிதர்களும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வது நிச்சயம்.

**நண்பர்கள் ஜெபம் :** இயேசுவோடு கூட 12 சீஷர்கள் இருந்தாலும் கூட பேதுரு, யோவான், யாக்கோபு ஆகிய மூன்று பேரும் நெருங்கிய நண்பர்களாக இயேசுவோடு இருந்தார்கள். லூக்– 9:28, 29–ம் வசனத்தில் இயேசு பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் கூட்டிக்கொண்டு ஜெபம்பண்ணுகிறதற்கு ஒரு மலையின் மேல் ஏறினார். அவர் ஜெபம் பண்ணுகையில் அவருடைய முகரூபம் மாறிற்று. அவருடைய வஸ்திரம் வெண்மையாகி பிரகாசித்தது. நண்பர்கள் தேவனுடைய மகிமையின் பிரகாசத்தை கண்டார்கள். நாமும் நண்பர்களோடு இணைந்து ஜெபித்தால் தேவனுடைய மகிமையைக் காணலாம்.

தரிசனங்களைக் காணலாம். நம்முடைய முகமும் மாறி நாம் தேவசாயலை அடையலாம். சந்தோஷம் மகிழ்ச்சி உண்டாகும்.

அப் – 16:25–30 வசனங்களில் பவுலும், சீலாவும் நண்பர்கள். இணை ஊழியர்கள். இவர்கள் சேர்ந்து ஊழியம் செய்து வந்தார்கள். ஆனால் ஒருநாளில் அநேக அடிகள் பட்டு, சிறைச்சாலையில் இருக்கும்போது கூட இரண்டு பேரும் ஜெபம்பண்ணி, தேவனை துதித்துப் பாடினார்கள். அப்பொழுது சிறைச்சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாய் பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்றுபோயிற்று. என்ன ஆச்சரியம்! உபத்திரவ நேரத்திலும் இரண்டு நண்பர்கள் இணைந்து நடுராத்திரியிலே ஜெபிக்கும் போது அவர்களுடைய கட்டுகளும், மற்றவர்களுடைய கட்டுகளும் தெறிபட்டன. மட்டுமல்லாமல் சிறைச்சாலை அதிகாரி குடும்பமும், அவனோடு கூட அனைவரும் இரட்சிப்பைப் பெற்று ஞானஸ்நானம் பெற்றார்கள்.

மட்டுமல்லாமல், அப். – 16:13–ல் பவுலும், தீமோத்தேயுவும் நல்ல நண்பர்கள். இவர்களும் ஓய்வுநாளில் பட்டணத்திற்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் இருந்து ஜெபம்பண்ணி வந்தார்கள் என்று தெரிகிறது. இவ்வாறு ஜெபித்ததினால் தான் ஐரோப்பா கண்டத்தின் முதல் விசுவாசியாக லீதியாள் என்ற பெண்ணை தேவன் தெரிந்து கொண்டார்.

மத். 18–19,20–ன்படி இரண்டுபேர் தாங்கள் வேண்டிகொள்ளப்போகிற எந்த காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்.

மட்டுமல்லாமல், லேவி 26:8–ன் படி உங்களில் ஐந்துபேர் நூறுபேரைத் துரத்துவார்கள்; உங்களில் நூறுபேர் பதினாயிரம்பேரைத் துரத்துவார்கள்; ஆகையால் நண்பர்களாய் சேர்ந்து, வீணான காரியங்களை குறித்து பேசி நேரத்தை வீணடிக்காதபடி, ஒருமனதோடு சேர்ந்து ஜெபித்து பெரிய காரியங்களை தேவனுக்காக செய்வோம்.

**சபையாக ஜெபம் :** சபையாராக விசுவாசிகளாக கூடி ஜெபிக்க வேண்டும். ஆதி கால திருச்சபையினர் எல்லாரும் ஒன்றுகூடி ஜெபித்தார்கள். அப் 4:30–32 வசனங்களில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது. விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயம், ஒரே மனதுடையவர்களாய் ஜெபித்தார்கள். அப்பொழுது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அனைவரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவ வசனத்தை தைரியமாய் சொன்னார்கள்.

சபையில் ஜெபிக்கும் போது, மூன்று காரியங்கள் நடந்ததை பார்க்கிறோம். இடம் அசைந்தது. பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள், தைரியமாய் தேவ வசனத்தை சொன்னார்கள். ஆம் பிரியமானவர்களே சபையார் ஜெபிக்கும் போது நிச்சயம் நமது இடம் அசைக்கப்படும். சுற்றியுள்ள புற இன மக்கள் அசைக்கப்படுவார்கள். மட்டுமல்லாமல், வசனத்தை மக்களுக்கு எடுத்து கூறும் தைரியத்தை பெறுவார்கள். சாட்சியாய் வாழ முடியும்.

அடுத்தபடியாக அப்–12:5–ல் பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள். நடந்த காரியம் என்ன? சபையாருடைய ஜெபத்தை கேட்டு, தேவன் ஒரு தூதனை அனுப்பி தமது ஊழியரை விடுவித்தார். சபையானது போதகருக்காக, ஊழியர்களுக்காக, ஜெபிக்க வேண்டும். அப்பொழுது, கர்த்தர் கேட்டு தமது ஊழியர்களை பாதுகாப்பார்.

**மட்டுமல்லாமல், 2 நாளா – 7:14–ல் என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி ஜெபம் பண்ணி என் முகத்தை தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தை கொடுப்பேன் என்று வாக்குக்கொடுத்திருக்கிறார். ஆகையால் அவருடைய நாமம் தரிக்கப்பட்ட பிள்ளைகள் ஒன்றுகூடி ஜெபிக்கும் போது தேசத்திற்கு க்ஷேமம் உண்டாகும்.**

கடைசியாக இயேசுவுடன் அவருடைய சீஷர்கள் மூன்றரை வருடம் ஊழியம் செய்யும் பொழுது அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் கண்டார்கள். ஆனாலும் கூட, இயேசுவிடம் அற்புதம் அடையாளங்கள் எப்படி நடக்கிறது? எங்களுக்கு கற்றுத்தாரும் என்று கேட்காமல், நாங்கள் எப்படி ஜெபிக்க வேண்டும்? எங்களுக்கு கற்றுத்தாரும் என்றார்கள். காரணம் என்னவென்றால், அவர்கள் இயேசுவிடம் கண்டகாரியம் அவர் எப்பொழுதும் ஜெபித்துக்கொண்டேயிருந்தார். ஜெபத்திற்கு பின்பு அற்புதம், அற்புதத்திற்கு பின்பும் தேவனை மகிமைப்படுத்தி ஜெபித்தார். ஆகையால் அவருடைய ஜெபம் தான், அவர் பிதாவோடு கொண்டுள்ள உறவுதான், அற்புத அடையாளங்களை கொண்டு வருகிறது என்பதை சீஷர்கள் நன்கு அறிந்து கொண்டார்கள். இந்நாட்களில், ஊழியக்காரர்களும், விசுவாசிகளும் கூட தங்கள் கைகளினால் அற்புத அடையாளங்கள் நடக்க வேண்டும் என்று வாஞ்சிக்கிறார்கள். ஆனால் ஜெபத்திற்கோ அதிக நேரம் கொடுப்பதில்லை. பிரியமானவர்களே! தேவனுடைய சமூகத்தை எவ்வளவு நாடுகிறோமோ அவ்வளவுக்கதிகமாய் தேவன் நம் மூலமாய் மகிமைப்படுவார்!

இயேசு கெத்சமனேயில் கடைசியாக ஜெபிக்கும் போது தம்முடைய சீஷர்களை பார்த்து, நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடு கூட விழித்திருக்க கூடாதா?

***ஜெபிப்போம்! ஜெயத்தை பெறுவோம்! தேசத்தை சுதந்தரிப்போம்!***

**“எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்” லூக். 21 : 36**

## ஷாலோம் ஊழியத்திற்கான உங்கள் பங்கினை இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா?

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

உங்கள் கரங்களில் கிடைக்கும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் ஆத்துமப் பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசனப் பணியான மிஷனெரிப் பணித்தளச் செய்திகளையும், தேவனுடைய வார்த்தைகளையும், ஜீவனுள்ள சாட்சிகளையும், மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது. இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து, உழைத்து, அநேகச் செலவுகளைச் செய்து அனுப்புகிறோம்.




இந்த தரிசனப்பணியை, தேவன் பேரில் கொண்ட அன்பின் நிமித்தமாக, தியாகத்துடனும், ஆத்துமப் பாரத்துடனும் மாதந்தோறும் / வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காகத் தேவனைத் துதிக்கிறேன். இப்படி ஜெபித்து, ஊழியங்களைத் தாங்கிவரும் ஆதரவாளர்கள் மாதந்தோறும் ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும், மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது. ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ, இந்த பத்திரிகைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லை.

பீல் ஆதிவாசி மக்களின் மத்தியில் நடைபெறும் மிஷனெரி ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக, இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் **இந்த வருடத்தில் ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லையெனில், தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி, ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான ரூ. 100/– ஐ அனுப்ப வேண்டுகிறோம்.**

அப்படியாக நீங்கள் வருடத்திற்கு ஒருமுறை, குறிப்பாக இந்த மே மாதத்திற்குள்ளாக காணிக்கை அனுப்பும்படி அன்புடன் கேட்கிறோம். **“அப்படி நீங்கள் காணிக்கை அனுப்பாத பட்சத்தில், நிதி நெருக்கடியின் காரணத்தினால் எங்களால் தங்களுக்கு மார்ச் - 2016 -லிருந்து பத்திரிகை அனுப்ப இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்”.**

நீங்கள் அனுப்பும் தியாகமான காணிக்கையை நாங்கள் வரவேற்கிறோம், உங்கள் குடும்பத்தையும், சந்ததியையும் தொடர்ந்து தேவன் ஆசீர்வதிப்பாராக

– பேராயர். வே. தேவதாஸ்

---

**‘‘... சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது’’. பிலி. 4:3.**

ஷாலோம் கிராம ஆலயம்

# காப்பரியா

குஜராத்



காப்பரியா என்ற கிராமம் குஜராத் மாநிலத்திலுள்ள தாகோத் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இந்த கிராமம் மிகவும் உள்ளடங்கிய கிராமமாகும். இந்த கிராமத்தில் வாழும் மக்கள் சண்டை போடுவதும், திருடுவதும், கொள்ளையிடுவதும், சாராயம் குடிப்பதும், பீடி, தம்பாக்கு போன்ற பாவ பழக்கங்களுக்கு அடிமையாகவும், விக்கிரக ஆராதனை செய்யும் பழக்கமுடையவர்கள் மேலும் முரட்டு குணம் உடையவர்கள்.

காப்பரியா கிராமத்தில் ரமேஷ் அமளியார் என்ற சகோதரருடைய வயிற்றில் கட்டி இருந்தது. சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. ஊழியர். ரணியா பாபோர் என்பவர் ஜெபித்ததில் தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் ரமேஷ் அமளியார் அவர்கள் குடும்பமாக இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். பின்பு ரமேஷ் பாயின் வீட்டில் கூட்டம் ஊழியர். ரணியா பாபோர் அவர்கள் 5 குடும்பங்களுடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். அதன் பின் ஊழியர். கீர்த்தன் அமளியார் அவர்கள் கூட்டத்தைப் பொறுப்பேற்று நடத்தினார். ஊழியர். கீர்த்தன் அமளியார் அவர்கள் இயேசுவை அறியாத போது சாராயம், பீடி, தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவருடைய மனைவி பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு, 6 மாதமாக கஷ்டப்பட்டார்கள். பின்பு வாந்தரியா கிராமத்தில் நடைபெற்றக் கூட்டத்திற்கு தன் மனைவியை அழைத்துச் சென்றார். அங்கு ஊழியர் இயேசுவைப் பற்றிக் கூறி, ஜெபித்த போது தேவன் பரிபூரண சுகத்தைக் கொடுத்தார்.

அந்த அற்புதத்தின் மூலம் இயேசுவை சொந்த இரட்சகராக குடும்பமாக ஏற்றுக் கொண்டார்கள். பின்பு ஊழியம் செய்ய தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப்பயிற்சி பெற்றார். தொடர்ந்து கூட்டத்திற்கு அநேக மக்கள் வர ஆரம்பித்தார்கள். ஆரம்ப நாட்களில் எதிர்ப்புகள் இருந்தது. சபையார் விசுவாசத்துடன் உபவாசித்து ஜெபித்ததில் தேவன் சூழ்நிலைகளை மாற்றினார். தற்போது 35 குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு சபையில் ஆராதித்து வருகிறார்கள். ஊழியர். கீர்த்தன் அமளியார் காணிக்கையாக கொடுத்த நிலத்தில் தற்போது தேவ நாம மகிமைக்காக 24–10–2015 அன்று பேராயர். தேவதாஸ் அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை!

இந்த கிராம ஆலயம் **இயேசு விடுவிக்கிறார்** (நாலுமாவடி) ஊழியத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டப்பட்டது.

**ரூ. 3 இலட்சங்கள் (or) ரூ. 2 இலட்சங்கள் மதிப்புகளில் 2016ம் ஆண்டிற்குள் 200 ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!**



# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

தேவனுடைய பெரிதான கிருபையினால் இதுவரை சுமார் 1 இலட்சத்திற்கும் அதிகமான ஆத்துமாக்கள் இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு திருச்சபையில் சேர்ந்துள்ளார்கள். இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து திருமுழுக்குப் பெற்றவர்கள் வாரந்தோறும் 620 கிராமங்களில் கூடி ஆராதிக்கிறார்கள். இதுவரை 322 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. 20.11.2009 அன்று தேவக் கிருபையால் திருச்சபைகள் திருமண்டலமாக (Shalom Diocese In India) உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. **தேவனுக்கே மகிமை!**

## செய்யவேண்டிய வேலையோ மிகப் பெரியது

தேவக் கிருபையால் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 500 க்கும் அதிகமான நம் பீல் சுதேச மிஷனெரிகள் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் நற்செய்தியை அறிவித்து பாவங்கள், சாபங்கள் நோய்களிலிருந்து மக்கள் திரளாக கிராமம் கிராமங்களாய் இயேசுவைச் சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். 600 க்கும் அதிகமான கிராமங்களில் சபைகள் கூடி ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் குறைந்தது 200 கிராமங்களில் ஆலயங்களைக் கட்ட திறந்த வாசல்களையும், வாய்ப்புகளையும் தேவன் தந்துள்ளார்.

மேலும் 7000 கிராமங்களில் வாழும் பீல் மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க விசேஷ அபிஷேகம் பெற்ற 48 சுதேச ஊழியர்கள் 12 குழுக்களாக மாதந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை 48 கிராமங்களில் நடத்துகிற நற்செய்திக் கூட்டங்கள் மூலமாக தேவன் பல அற்புத அடையாளங்களை நடத்தி வருகிறார். அதன் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல நூறு குடும்பங்கள் தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.

25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு 7 மூப்பர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுதேச ஊழியர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்குக் கொடுக்க முன் வருகிறார்கள். குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் 30 x 18, 40 x 20, 50 x 20 அளவுகளில் முறையே 2 இலட்சங்கள், 3 இலட்சங்கள், 5 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து ஆலயம் கட்டித் தரும் ஆதரவாளர்கள் தேவை. நீங்கள் சபையாக, குழுவாக, குடும்பமாகக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.



## *பணித்தளங்களில் கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களில் ஒரு சில*







## 2016 ஆம் வருடத்தில் 200 கிராம ஆலயங்களைக் கட்டி எழுப்ப

✞ ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 100 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 1 இலட்சம் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 200 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 50,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 400 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 20,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 1000 பேர்கள் (அல்லது)

✞ ரூ. 10,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் – 2000 பேர்கள் (அல்லது)

✞ தங்களால் முடிந்த காணிக்கைகளைக் கொடுத்து இந்த தேவத் திட்டத்தை நிறைவேற்றும் ஆதரவாளர்களை தேவன் எழுப்பித் தரும்படியாக ஜெபிப்பதோடு நீங்களும் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெறுங்கள்.

☞ உங்கள் சபையில் சிறப்புக் காணிக்கைக் கொடுப்பவர்களை எழுப்பி சபை மூலமாக ஆலயங்களைக் கட்ட முன்வாருங்கள்.

☞ உங்கள் குடும்பத்தின் சார்பிலோ அல்லது உங்களது உறவினர்கள் நண்பர்களுக்கு இந்த ஊழியத்தினை அறிமுகம் செய்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.

---

**ரூ. 2 இலட்சங்கள் மற்றும் ரூ. 1 இலட்சம் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு தனி கிராம ஆலயம் கொடுக்கப்பட்டு, ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை ஆகியன அனுப்பி வைக்கப்படும். மற்ற நிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.**

---

**நிதி உதவி அனுப்பும் போது Sharing Love Mission என்ற பெயருக்கு (Tuticorin Branch) D.D. or Cheque எடுத்து 200 கிராம ஆலய கட்டுமானப் பணிக்கான சிறப்பு நிதி என்று குறிப்பிட்டு அனுப்பி வைக்கலாம். மேலும் எங்கள் அலுவலகம், முன்னேற்றப் பணியாளர்கள், பிரதிநிதிகளிடம் கொடுத்து ரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.**

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHARING LOVE MISSION (Tuticorin Branch)** |
| TMB வங்கிக் கணக்கு எண் | : | **106100710400009** (I F S Code : TMBL0000106) |
| Axis வங்கிக் கணக்கு எண் | : | **105010100094373** (IFS Code : UTIB0000105) |
| ICICI வங்கிக் கணக்கு எண் | : | **613901112799** (IFS Code : ICIC0006139) |

# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதப்புத்தகங்கள்

**கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று – அப். 13:49.**



கைகளில் வில் அம்புகளை வைத்துக்கொண்டு திருடியும், கொள்ளையடித்தும் சாராயத்தைக் காய்ச்சி குடித்தும் கொண்டிருந்த பீல் மக்கள். மந்திரப் பூஜைகள் செய்து பிசாசின் பிடியிலும், அந்தகாரத்திலும் வாழ்ந்து வந்த பீல் மக்கள் மத்தியில் ஷாலோம் தரிசனப் பணிகளை தேவன் கொண்டு வந்தது மட்டுமல்ல, மகத்துவமான காரியங்களையும் செய்திருக்கிறார்.

கடந்த 24 ஆண்டுகளில் 580 பீல் சுதேச ஊழியர்களை எழுப்பவும் அவர்கள் மூலமாக 660 க்கும் மேற்பட்ட சபைகளை உருவாக்கவும் தேவன் கிருபை தந்துள்ளார். பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு கிராம விசுவாசிகள் எங்களிடம் இந்த கறுப்புக் கலர் புத்தகம் என்னவென்று ஆவலாய் கேட்பார்கள். மேலும் எங்களுக்கு ஒன்று தாருங்கள் என கேட்டு வேதாகமத்தை வாங்கி பயபக்தியுடன் அரவணைத்து வைத்துக் கொள்வார்கள். அவர்களுக்கு இலவசமாக வேதாகமத்தைக் கொடுக்காமல் குறைந்த விலையாக ரூ. 50/–க்குக் கொடுத்து வருகிறோம்.



கடந்த ஆண்டு 6,000 க்கும் மேலானவர்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டார்கள். அந்த விசுவாசக் குடும்பத்தார் ஆவலுடன் வேதப்புத்தகத்தைக் கேட்கவே அவர்களுக்கு வேதப்புத்தகம் வழங்கப்பட அநேகச் சபைகள் மற்றும் தேவப்பிள்ளைகளிடம் அறிவிப்பு கொடுத்தோம். கடந்த வருடம் தேவக்கிருபையினால் சுமார் 4,000 வேதப்புத்தகங்களை வாங்கி மிகக் குறைந்த விலையில் வழங்க தேவன் கிருபைத் தந்தார்.

இவ்வருடம் 25,000 வேதப்புத்தகங்கள் குஜராத்தி, ஹிந்தி மொழியில் வழங்கப்பட வேண்டும். ஒரு வேதப் புத்தகத்திற்கு ரூ. 150/– வீதம் 25,000 வேதப்புத்தகங்களுக்கு நிதி உதவி செய்ய ஆதரவாளர்கள் தேவை. கிராமங்களில் வாழும் பீல் ஆதிவாசி மக்களுக்கு வேதப்புத்தகம் வழங்க தேவ ஜனங்களாக, குடும்பமாக, சபையாக முன் வாருங்கள். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!



## 1. சிறப்புக் கூடுகைகள் (Special Meeting)

### 1. ஊழியர் கூடுகை : (Sevak Meeting)

2015 ஜனவரி 6 முதல் 9 வரை குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் சுதேச ஊழியர்கள் 574 குடும்பங்களுக்கும், பணித்தள அலுவலக ஊழியர்கள் மற்றும் Project ஊழியர்கள் 132 பேருக்கும் புதிய வருட சிறப்புக் கூடுகை நடத்தப்பட்டது. வாக்குத்தத்த செய்தியைக் கொடுத்து, ஜெபித்த போது ஆவியானவர் அபரிவிதமாய் இறங்கி வந்தார். இதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் தவறாமல் ஊழியர்களின் கூட்டத்தை நடத்தத் தேவன் கிருபை செய்தார். குஜராத், மத்தியப்பிரதேச ஊழியர்களுக்கு தாகோத் பயிற்சி மையத்திலும், இராஜஸ்தான் ஊழியர்களுக்கு கோய்க்கா மற்றும் செவனியா பகுதிகளிலும் கூட்டம் நடைபெற்றது. ஊழியர்கள் உற்சாகமாய் பங்குபெற்று ஆடிப்பாடி தேவனை ஆராதித்து ஒவ்வொரு மாதமும் புதிய வல்லமையைப் பெற்றார்கள்.

### 2. வட்டாரத் தலைமை ஊழியர்கள் கூடுகை : (Area Leaders Meeting)

மூன்று மாநிலங்களிலுமுள்ள மூத்த ஊழியர்கள் அதாவது தலைமை ஊழியர்கள் அவ்வப்போது சந்தித்து, ஊழியங்களைக் குறித்துக் கலந்தாலோசித்து ஒவ்வொரு காரியங்களையும் திட்டமிட்டு செயல்படுத்த தேவன் கிருபை செய்தார்.

### 3. பணித்தள அலுவலக ஊழியர்கள் கூடுகை : (Field Office Staff Meeting)

ஒவ்வொரு மாதமும் பணித்தள அலுவலக ஊழியர்களுக்கென்று கூட்டம் நடத்தப்பட்டு அதில் அந்தந்த மாதத்திற்குரிய ஊழியத் திட்டங்கள் விவரிக்கப்பட்டு, விசேஷ ஜெபங்களும் ஏறெடுக்கப்பட்டது. மட்டுமல்லாமல் அனுதினமும் காலை 9.30 மணிக்கு அலுவலக ஊழியர்களுக்குக் காலைத் **“ தியான ஜெபம் ”** நடைபெற்றது.

### 4. Project ஊழியர்கள் கூடுகை : (Project Staff Meeting)

மாதந்தோறும் 30ம் தேதி குஜராத் மாநிலத்திலுள்ள தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து குஜராத் ஹிரோலா, ஜெரியிலுள்ள CDC ஊழியர்கள் மற்றும் மத்தியப்பிரதேசம் அந்தர்வேலியாவிலுள்ள CDC ஊழியர்கள் அனைவருக்கும் கூட்டம் நடத்தப்பட்டது.

### 5. தலைமை ஊழியர்கள் மனைவிமார் கூடுகை : (Leader Evengelists Wives Meeting)

2015 பிப்ரவரி மாதம் 12 முதல் 19 வரை நான்கு இடங்களில் (குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் 1 மற்றும் இராஜஸ்தான் 2) அனைத்து ஊழியர்களின் மனைவிமார்களுக்கென்று சிறப்பு அபிஷேகக் கூட்டம் நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் முதல் நாள் தாகோத் பயிற்சி மையத்தில் 150 ஊழியக்காரிகள் உபவாசத்தோடு வந்து இந்தக் கூட்டத்தில் பங்குப் பெற்றார்கள். பாடல், ஆராதனை, சாட்சிகள் மற்றும் சிறப்பு செய்தியும், விசேஷ ஜெபமும் ஏறெடுக்கப்பட்டது. **சகோதரி. Dr. வஹிதா தேவதாஸ்** அவர்கள் இந்தக் கூட்டத்தினை பொறுப்பாக நடத்தி வருகிறார்கள்.

**6. ஊழியக்காரிகளுக்கான பகுதிவாரியான கூடுகை : (Area Wise Sevikaben Meeting)**

2015 ஆம் ஆண்டில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் 550 ஊழியர்களின் மனைவிமார் அனைவரையும் சந்தித்து, அந்தந்த மாநிலங்களில் 4 இடங்களில் கூட்டங்களை நடத்தினார்கள். மூத்த ஊழியக்காரிகள் தலைமையில் அந்தந்தப் பகுதிகளில் உள்ள மற்ற ஊழியர்களின் மனைவிமார்களுக்கு சுமார் 30 இடங்களில் கூட்டங்கள் மாதந்தோறும் நடத்தப்பட்டது.

**7. சபை விசுவாசப் பெண்கள் கூடுகை : (Church Belivers Ladies Meeting)**

போதகர்கள் மற்றும் சுதேச ஊழியர்களின் மனைவிமார்கள் தங்கள் சபைகளில் மாதந் தோறும் விசுவாசிப் பெண்களுக்கென்று கூட்டங்களை நடத்தி வருகிறார்கள். இதில் 1 கோடி பீல் மக்களின் இரட்சிப்பிற்காக பாரத்தோடும், கண்ணீரோடும் ஆவியில் நிறைந்து ஜெபிக்கிறார்கள்.

மேலும் பயிற்சி பெற்ற 150 மூத்த ஊழியக்காரிகள் 50 குழுக்களாகப் பிரிந்து 650 ஷாலோம் திருச்சபையில் அனைத்து விசுவாசிப் பெண்களுக்கு விசேஷக் கூட்டங்களை நடத்தினார்கள். இந்தக் கூட்டங்களில் தேவன் சபையின் பெண்களை அபிஷேகத்தால் நிறைத்து அற்புத விடுதலையையும் கொடுத்தார். அவர்கள் ஆவியில் பெலப்பட்டார்கள்.

**8. ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்கள் கூடுகை : (Sunday School Teachers Meeting)**

பிப்ரவரி 21, 28 மற்றும் மார்ச் 1–ம் தேதிகளில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களிலுள்ள ஞாயிறுப் பாடசாலை ஆசிரியர்கள் சுமார் 450 பேர்களுக்கு விசேஷக் கூட்டங்கள் நடத்தப்பட்டது. இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை இவர்களுக்கு விசேஷக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதில் ஆசிரியர்கள், ஞாயிறுப் பாடசாலை மாணவர் வருகைப் பதிவேடு (Attendance Register) மற்றும் காணிக்கைப் பெட்டியையும் கொண்டு வருவார்கள். இவர்களுக்கு ஒவ்வொரு முறையும் விசேஷித்த அபிநயப்பாடல் (Action Song) மற்றும் வேதப்பாடக் கதைகள், மனப்பாட வசனம் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மட்டுமல்லாமல் இவர்களை உற்சாகப்படுத்தும் வண்ணமாக மாதந்தோறும் சிறிய காணிக்கையும் இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

**9. சிறப்பு ஆத்தும அறுவடைத் திட்ட ஊழியர் கூடுகை : (Special Soul Winning Project Sevak Meeting)**

இந்தத் திட்டத்திற்கென்று சிறப்புப் பயிற்சிப் பெற்ற 48 ஊழியர்களுக்கும் இரண்டு மாதத்திற்கு ஒருமுறை சிறப்புக் கூட்டம் தாகோத் பயிற்சி மையத்தில் வைத்து நடைபெற்று வருகிறது. இந்தக் கூட்டங்களில் 48 ஊழியர்களும் வந்து தேவன் பணித்தளங்களில் செய்த அற்புதங்களைக் குறித்துச் சாட்சி கொடுத்து தேவனை மகிமைப்படுத்துகிறார்கள். அற்புத அடையாளங்களுடன் தேவன் வல்லமையாக பயன்படுத்தி வருகிறார். பின்பு அடுத்த மாத சுகமளிக்கும் கூட்டங்களைக் குறித்துக் கலந்தாலோசித்து நல்ல கருத்துக்களைப் பகிர்ந்து கொள்கிறார்கள்.

## II. ஜெப ஊழியங்கள் (Prayer Ministries)

**1. சங்கிலித் தொடர் ஜெபம் : (Chain Prayer)**

நம்முடைய ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்பமாகத் தினமும் ஒரு ஊழியர் குடும்பம் தாகோத் பயிற்சி மையத்தில் உள்ள சிறு அறையில் தொடர்ச்சியாக ஜெபிக்க வந்தார்கள். பின்பு

செப்டம்பர் 1–ம் தேதியிலிருந்து தனியாக ஒரு மாடிவீடு வாடகைக்கு எடுக்கப்பட்டு **Shalom Prayer Centre** ஆரம்பிக்கப்பட்டு அதில் 12 மணி நேர (காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை) தொடர் ஜெப ஊழியம் நடைபெற்று வருகிறது. தினமும் இரண்டு ஊழியர்களின் குடும்பம் மற்றும் சபை ஊழியர்கள் ஜெப மையத்திற்கு வந்து தேசத்திற்காகவும் பீல் மக்களின் இரட்சிப்பிற்காகவும் விண்ணபங்களை ஏறெடுக்கிறார்கள். மேலும் தொலைபேசி மூலமாக ஏறெடுக்கப்படும் ஜெபங்களையும் தேவன் கேட்டு, அநேக அற்புதங்களை செய்து வருகிறார்.

**2. அந்நிய பாஷை ஜெபம் : (Tongues Prayer)**

ஊழியக்காரிகள் மாதத்திற்கு ஒருமுறை அதாவது முதல் வாரத்தில் 3 மாநிலங்களிலும் 8 இடங்களில் அந்தந்தப் பகுதிகளில் கூடி 3 மணி நேரம் அந்நிய பாஷை ஜெபத்தை ஏறெடுத்து வருகிறார்கள். இதில் அநேகர் தரிசனங்களைக் காண்கிறார்கள். இது நமது தரிசனப் பணியில் இன்னும் முன்னேறிச் செல்ல உற்சாகமளிப்பது மட்டுமல்லாமல் ஊழியக்காரிகள் தங்கள் சபைகளில் உள்ள மூப்பர்களின் மனைவிமார்களுடன் இணைந்து மாதந்தோறும் 1 மணி நேரம் அந்நிய பாஷை ஜெபம் செய்கிறார்கள்.

**3. பெண்களுக்கான உபவாச ஜெபம் : (Ladies Fasting Prayer)**

சுதேச ஊழியர்களின் மனைவிமார்கள் அந்தந்தப் பகுதி வாரியாகப் பிரிக்கப்பட்டு 7, 7 நாட்கள் முறையே வருடம் முழுவதும் தொடர் உபவாச ஜெபம் செய்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் 1 நாள், 3 நாள், 21 நாள், 40 நாள் என்று பிரித்தும் உபவாசம் இருந்து சொந்த ஜனம் இரட்சிக்கப்படும்படி ஜெபித்து வருகிறார்கள்.

**4. ஆண்கள் மற்றும் பெண்களுக்கான முழு இரவு ஜெபம் : (All Night Prayer)**

ஒவ்வொரு மாதமும் ஆண்கள், பெண்கள் முறையே மாதத்திற்கு ஒருமுறை தாகோத்தில் வைத்து நடத்தப்பட்டு வரும் முழு இரவு ஜெபத்தில் பணித்தள அலுவலர்கள் மற்றும் தலைமை ஊழியர்கள் பங்கெடுக்கிறார்கள். இதில் 1 கோடி பீல் மக்கள் சந்திக்கப்படும்படியாய் பாரத்தோடு ஜெபிக்கிறார்கள்.

**5. தொலைபேசி ஜெப ஊழியம் : (Telephone Prayer Ministry)**

தொலைபேசி மூலம் விசுவாசிகள் இரவும், பகலும் ஜெபத்திற்காக தொடர்பு கொள்ளுகிறார்கள். தேவன் தொலைபேசி ஜெபத்தைக் கேட்டு மக்களுக்கு நோய்களிலிருந்து விடுதலை தருகிறார். தேவன் அவர்களை உடனடியாக விடுவிக்கிறார். பீல் சுதேச ஊழியர்களும் கூட தங்கள் சபையின் விசுவாசிகளுக்குத் தொலைபேசி மூலம் ஜெபிக்கிறார்கள். தேவன் அநேக அற்புதங்களை செய்கிறார். விடுதலையையும், சுகத்தையும் தருகிறார்.

**6. 40 நாள் உபவாச ஜெபம் : (40 Days Fasting Prayer)**

லெந்து நாட்களில் சபையார் யாவரும் 40 நாட்கள் உபவாச ஜெபத்தை ஏறெடுக்கிறார்கள். கூலி வேலை செய்கிறவர்களும் கூட மிகுந்த உற்சாகமாய் உபவாசித்து ஜெபம் செய்கிறார்கள். இந்த 40 நாட்களும் சபையில் ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு நாள் என்று தொடர் உபவாச ஜெபம் செய்து வருகிறார்கள். மேலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சபையார் அனைவரும் சேர்ந்து உபவாச ஜெபம் ஏறெடுக்கிறார்கள்.

**7. பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம் : (Special Prayer for Exam Students)**

3 மாநிலங்களிலும் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கென்று பிப்ரவரி மாதம் 15–ம் தேதி மத்தியப்பிரதேசத்திலும், 22–ம் தேதி இராஜஸ்தானிலும் மற்றும் மார்ச் 1–ம் தேதி குஜராத்திலும் விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதில் சுமார் 1000–க்கு அதிகமான மாணவ, மாணவிகள் கலந்துக் கொண்டு ஜெபித்துச் சென்றார்கள். இதில் **சகோ. டைட்டஸ்** மற்றும் சகோதரி **மெர்லின் டைட்டஸ்** இருவரும் தங்கள் அனுபவங்களிலிருந்து ஆலோசனைகளை வழங்கினார்கள். கலந்துக் கொண்ட பிள்ளைகள் " **எங்களுக்கு இருந்த தேர்வைக் குறித்த பயம் நீங்கி நாங்கள் தைரியம் பெற்றோம்** " என சாட்சி பகிர்ந்துக் கொண்டார்கள். பின்பு ஜெபித்து பேனா, வசன ஸ்டிக்கர், மற்றும் சாக்லேட் என அன்பளிப்புகளுடன் உணவும் வழங்கப்பட்டது. இதின் விளைவாக இந்த மாணவர்கள் 70, 80, 90 சதவீத மதிப்பெண்களைப் பெற்று பலதரப்பட்ட உயர்கல்வியில் சேர்ந்துப் படித்து வருகிறார்கள். கடந்த ஆண்டு நடைபெற்ற சிறப்பு ஜெபத்தில் பங்கு பெற்று, அதிக சதவீதத்தில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர் தேவ நாம மகிமைக்காக சாட்சிகளைப் பகிர்ந்துக் கொண்டார்கள்.

## III. பயிற்சிகள் (Trainings)

**1. புதிய சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி : (New Evengelists Training)**

கடந்த ஆண்டு சுமார் 48 புதிய ஊழியர்களுக்கு மார்ச் மாதத்தில் 1 மாத ஊழியம் மற்றும் வேதாகப் பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள் யாவரும் புதிய கிராமங்களிலிருந்து வந்தவர்கள். கர்த்தருக்காக ஊழியம் செய்யத் தங்களை அர்ப்பணித்து பயிற்சி பெற்று புதிய சபைகளை உருவாக்கி வருகிறார்கள். ஊழியர்களைத் தேவன் வல்லமையாகப் பயன்படுத்தி வருகிறார்.

**2. சிறுவர் வேதாகமப் பள்ளி ஆசிரியர் பயிற்சி : (CBC) Children Bible Class Teachers Training)**

கடந்த ஆண்டு சிறுவர் வேதாகமப் பள்ளி (CBC) இயக்குநர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஞாயிறுப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விசேஷப் பயிற்சி கொடுக்கப்பட்டது. இதில் சுமார் 1200 பேர்களுக்கு 3 மாநிலங்களில் 5 பகுதியாகப் பிரித்து 10 நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டது. **"நிலைத்திரு"** என்ற தலைப்பில் பாடங்கள், கதைகள், பாடல்கள், குறுநாடகங்கள் போன்றவைகள் கற்றுக் கொடுக்கப்பட்டது. விசேஷமாக யோசேப்பின் வாழ்க்கையைப் பற்றி குறுநாடகம் நடித்துக் காண்பிக்கப்பட்டது. பயிற்சிப் பெற்றவர்கள் சபைகளில் சென்று 40,000 சிறுவர்களுக்கு CBC வகுப்புகளை நடத்தினார்கள். விசுவாசிகளல்லாத குடும்பத்தின் சிறுவர்களும் அநேகர் இதில் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெற்றார்கள். சபையின் மூப்பர்கள் சிறுவர்களுக்கு சிற்றுண்டி மற்றும் சாப்பாடு கொடுத்து சிறுவர்களை உற்சாகப்படுத்தினார்கள்.

**3. தலைமைத்துவப் பயிற்சி : (Leadership Training)**

**Dr. Abel** அவர்கள் தலைமையில் **Dr. Jay Clark (U.S.)** அவர்கள் வந்து அகமதாபாத்தில் கடந்த வருடத்தில் 2 நாள் பயிற்சி இரண்டு முறை நடத்தினார்கள். இதில் ஷாலோம் பணித்தள அலுவலகத்தில் ஊழியம் செய்யும் முக்கியமான ஊழியர்களும் **Project**-ல் உள்ள 3 ஒருங்கிணைப்பாளர்களும் முக்கிய போதகர்களும் பங்கு பெற்றார்கள். இந்த பயிற்சி கலந்துக் கொண்ட அனைவருக்கும் ஊழியத்தில் இன்னும் முன்னேறிச் செல்ல ஊக்கத்தை அளித்தது.

**4. நிர்வாகம் மற்றும் ஒருங்கிணைப்பு செயல்பாடுகள் :** (**Administration of Coordinating Activities**)

நமது ஷாரோன் மிஷன் நினைவு மருத்துவமனையில் கடந்த மே மாதம் 15 நாட்கள் **Dr. Inbakumar** அவர்கள் விடுமுறைக்காக தென்இந்தியா சென்ற நாட்களில் **Dr. Abel** அவர்கள் முழுப்பொறுப்பேற்று மருத்துவப் பணியை நிறைவேற்றினார்கள். **Dr. Jolly, Abel** அவர்கள் Net Arrangement Reports போன்ற காரியங்களை சிறப்பாக செய்தனர்.

## IV. சிறப்பு முகாம்கள் (Special Camps)

### 1. சிறுவர் முகாம்கள் : (Children Camps)

2015 நவம்பர் மாதத்தில், 4 வயது முதல் 12 வயது வரையுள்ள நமது விசுவாசி சிறுவர்களுக்கு விசேஷித்த சிறுவர் முகாம்கள் 4 இடங்களில் நடத்தப்பட்டது. இதில் சுமார் 600 பிள்ளைகள் பங்குப் பெற்று தேவாசீர்வாதம் பெற்றார்கள். சிறுவர்கள் பாடல்களைப் பாடி ஆடி உற்சாகத்தோடு தேவனை ஆராதித்தார்கள். இந்த ஆராதனையில் அநேகர் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டார்கள். **சகோ. பிராங்க்ளின்** அவர்கள் ஆராதனையைப் பொறுப்பாக நடத்தினார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் 1 தீமோத். 4:12ன்படி **"மாதிரியாயிரு"** என்ற தலைப்பில் நடத்தினார்கள். இம்முகாம்களில் குழு கலந்துரையாடல் நடத்தப்பட்டதால் பிள்ளைகள் **" நாம் வாழ்க்கையில் எப்படி மாதிரியாயிருக்க வேண்டும்"** என்பதைக் குறித்து தெளிவைப் பெற்றார்கள். மற்றும் நடத்தப்பட்ட குறுநாடகம் பிள்ளைகளின் உள்ளத்தில் பதிந்து விட்டது. பிள்ளைகள் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டார்கள். **Puppet Show** நடத்தப்பட்டு கடைசியில் உணவு வழங்கப்பட்டது. இதே போல் இராஜஸ்தானில் இன்னும் 10 இடங்களிலும், மற்றும் மத்தியப்பிரதேசத்தில் 10 இடங்களிலும், குஜராத்தில் 5 இடங்களில் ஆக மொத்தம் 25 இடங்களில் நடத்தப்பட உள்ளது.

### 2. வாலிபர் முகாம்கள் : (Youth Camps)

குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் வாலிபர்களுக்கு 12 முகாம்கள் நடத்தப்பட்டது. **"மாதிரியாயிரு"** என்ற தலைப்பில் இம்முகாம் நடத்தப்பட்டது. சுமார் 3000 வாலிபர்கள் கலந்துக் கொண்டு ஆசீர்வாதம் பெற்றனர்.

### 3. மூப்பர்கள் முகாம்கள் : (Elders Camps)

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தில் 2 நாட்கள் முறையே 5 முகாம்கள் மெகமதாபாத் Alliance Centre-ல் வைத்து நடைபெற்றது. 3 மாநிலங்களிலும் சேர்த்து 650 சபைகளில் மூப்பர்களுக்கென்று விசேஷக் கூட்டங்களை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் பொறுப்பாக நடத்தினார்கள். ஒவ்வொரு சபையிலிருந்தும் 5 முதல் 7 மூப்பர்கள் வீதம் சுமார் 3000 மூப்பர்கள் பங்குப் பெற்று அபிஷேகத்தினால் நிரம்பி வல்லமையையும் ஆத்தும பாரத்தையும் பெற்றுக் கொண்டார்கள். இவர்கள் சொந்த ஜனம் இரட்சிப்பிற்காகவும் பாரத தேசத்தின் ஆசீர்வாதத்திற்காகவும், சபை எழுப்புதலுக்காகவும் ஜெபித்து, சபையின் போதகர்களுக்கு துணையாக இருந்து செயல்பட்டு வருகிறார்கள்.

## V. சபையின் செயல்பாடுகள் (Church Activities)

### 1. ஞாயிறு ஆராதனைகள் : (Sunday Services)

ஷாலோம் ஊழியத்தில் தேவன் கொடுத்த 650 சபைகளிலும், வாரந்தோறும் ஒழுங்காக ஞாயிறு ஆராதனை நடைபெறும்படியாகத் தேவன் கிருபை செய்தார். போதகர்கள், சுதேச ஊழியர்கள் மற்றும் மூப்பர்கள் இந்த ஆராதனையைப் பொறுப்போடு நிறைவேற்றினார்கள்.

### 2. ஞானஸ்நான ஆராதனை : (Baptism Service)

கடந்த வருடத்தில் மூன்று மாநிலங்களிலும் சுமார் 8000 புதிய விசுவாசிகள் இயேசுவை ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.

### 3. திருவிருந்து ஆராதனை : (Holy Communion Service)

அனைத்து ஷாலோம் சபைகளிலும் திருவிருந்து ஆராதனை ஒவ்வொரு மாதமும் முதல் வாரம் நடத்தப்பட்டு வருகிறது. அபிஷேகம் பண்ணப்பட்ட போதகர்கள் இதை நடத்துகிறார்கள். இரட்சிக்கப்பட்டு ஞானஸ்நானம் எடுத்தவர்களுக்கு வழங்கப்படுகிறது.

### 4. ஞாயிறுப் பள்ளி : (Sunday School)

450 ஷாலோம் சபைகளில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறுவர்களுக்கான ஞாயிறு பாடசாலை நடத்தப்பட்டு வருகிறது. இதில் 3 இராஜ்ஜியங்களிலும் சிறுவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகிறார்கள். இதனைப் பயிற்சிப் பெற்ற வாலிபர்கள் பொறுப்பாக நடத்தி வருகிறார்கள். மற்றும் 3 மாநிலங்களிலும் இவ்வூழியத்தைக் கண்காணிக்க 6 மேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் ஆசிரியர்களுக்கு 2 மாதத்திற்கு ஒருமுறை கூட்டம் நடத்தப்படுகிறது.

### 5. சிறுவர் வேதாகமப் பள்ளி : (Children Bible Class - CBC)

2015ம் ஆண்டில் “நிலைத்திரு” என்ற தலைப்பில் மே மாதம் 10 நாட்கள் சிறுவர்களுக்கென்று CBC வகுப்புகள் நடத்தப்பட்டது. இதில் சுமார் 650 சபைகளிலிருந்து 40ஆயிரத்திற்கும் அதிகமான பிள்ளைகள் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள். இதில் கிராமங்களிலுள்ள விசுவாசிகளல்லாத குடும்பத்தின் பிள்ளைகளும் பங்கு பெற்று இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். இதற்காக தேவனுக்கு மகிமை செலுத்துகிறோம்! சபை மூப்பர்கள் பொறுப்பேற்று பிள்ளைகளுக்கு சிற்றுண்டி வழங்கினார்கள்.

## VI. விழாக்கள் (Festivals)

### 1. ஷாலோம் மிஷன் தினம் : (Shalom Mission Day)

கடந்த 2015ம் ஆண்டு ஜுலை 1ம் தேதி ஷாலோம் மிஷன் தினத்தை அனைத்து ஷாலோம் சபைகளில், போதகர்கள் மற்றும் விசுவாசிகள் மேலும் அலுவலக ஊழியர்கள் அனைவரும் கொண்டாடினார்கள். இந்நாளில் தேவன் தந்த ஷாலோம் ஊழியத்திற்காக நன்றி செலுத்தி இதுவரை அதிசயமாய் நடத்தி வந்த தேவனுக்கு மகிமை செலுத்தினார்கள்.

**2. ஷாலோம் மிஷன் ஞாயிறு : (Shalom Mission Sunday)**

கடந்த அக்டோபர் மாதம் 4, 11, 18 ஆகிய தேதிகளில் குஜராத் மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் மாநிலங்களில் உள்ள அனைத்து ஷாலோம் சபைகளிலும் ஷாலோம் மிஷன் ஞாயிறு கொண்டாடப்பட்டது. அன்றைய தினத்தில் தங்களது சொந்த ஜனங்கள் இயேசு கிறிஸ்துவை அறிய வேண்டுமென்றும், ஷாலோம் ஊழியங்கள் வளர்ந்து பெருகவேண்டுமென்றும் விசுவாசிகள் அனைவரும் உற்சாகமாயும் உதாரத்துவமாயும் தேவனுக்கென்று காணிக்கைகளைச் செலுத்தினார்கள்.

**3. ஷாலோம் அற்புதத்தின் நாள் : (Shalom Mirracle Day)**

2015–ம் ஆண்டில் செப்டம்பர் 25–ம் தேதியன்று ஷாலோம் அற்புதத்தின் நாள் அநுசரிக்கப்பட்டது. எல்லா சபைகளிலும் தேவன் அற்புதங்களைச் செய்தார். மேலும் புதிய ஆத்தமாக்களும் பங்கு பெற்று சுகம் பெற்றார்கள். **பிஷப். வே. தேவதாஸ்** அவர்களும், **சகோதரி. Dr. வஹிதா தேவதாஸ்** அவர்களும் ஜெபித்து, ஜெப எண்ணெயை ஊழியர்களுக்குக் கொடுத்து அனுப்பினார்கள். ஊழியர்கள் வியாதியஸ்தர்கள் மீது எண்ணெய் பூசி ஜெபித்தார்கள். அந்த நாளில் சுமார் 5000க்கும் அதிகமான அற்புதங்களைத் தேவன் செய்தார்.

**4. ஷாலோம் திருமண்டல நாள் : (Shalom Diocease Day)**

நவம்பர் 20–ம் தேதி ஷாலோம் திருமண்டல நாள் ஆகும். அன்று நடைபெற்ற ஷாலோம் குடும்ப ஐக்கிய முகாமில் அனைத்து ஊழியர்களும் இணைந்து திருமண்டலத்திற்காகவும். **Church Network-** க்காகவும் விசேஷித்த ஜெபம் ஏறெடுத்தார்கள்.

**5. சிறுவர் ஞாயிறு : (Children Sunday)**

கடந்த மே மாதம் 17–ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அன்று அனைத்து சபைகளிலும் சிறுவர் ஞாயிறாகக் கொண்டாடினார்கள். இந்த நாளில் ஆரம்ப ஜெபம், ஆராதனை, வேதவாசிப்பு, செய்தி வேளை என முழு பொறுப்புகளையும் சிறுவர்களே ஏற்று நடத்தினார்கள். மேலும் மனப்பாட வசனங்கள், **Action Songs,** குறுநாடகம் போன்றவைகளை நடத்திக் காட்டி சபையாரை பரவசப்படுத்தினார்கள்.

**6. அறுப்பின் பண்டிகை : (Harvest Festival)**

கடந்த நவம்பர் மாதம் ஷாலோம் அறுப்பின் பண்டிகை கொண்டாடப்பட்டது. விசுவாசிகள் தங்கள் விளைவின் முதற்பலனிலிருந்து தசமபாகமாக தானியங்களை உற்சாகமாக ஆலயத்திற்குக் காணிக்கையாகக் கொண்டு வந்து தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**7. புனித வெள்ளி & கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் : (Good Friday & Easter Sunday)**

லெந்து நாட்களில் சபை மக்கள் 40 நாட்கள் உபவாசம் இருந்து ஜெபித்தார்கள். பெரிய வியாழன் அன்று திருச்சபைகளில் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. புனித வெள்ளியன்று ஆலயத்திற்குச் சென்று இயேசுவின் பாடு மரணத்தைக் குறித்து தியானித்து இயேசுவின் உயிர்த்தெழுதலை உண்மையாய் உணர்ந்து மகிழ்ச்சியோடு கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளை எல்லா சபைகளிலும் கொண்டாடினார்கள்.

**8. ஷாலோம் போதகர்கள் & சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் : (Shalom Family Conference)**

2015–ம் ஆண்டில் ஷாலோம் ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் குஜராத்தில் பரூச் நகரில் **Spiritual Life Centre**-ல் நவம்பர் 17 முதல் 20ம் தேதி வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஊழியர்களும், ஊழியக்காரிகளும் சேர்ந்து சுமார் 1100க்கும் மேற்பட்டவர்கள் பங்கு பெற்று இவர்களுக்கு உணவு, உறைவிடம் மற்றும் கூட்ட ஒழுங்குகள் சிறப்பாக செய்யப்பட்டது.

இம்முகாமில் பாடல் ஆராதனையை **Pr. சன்னி விஷ்வாஸ்** மற்றும் **சகோ. விஜய்** அவர்களும் சிறப்பாக நடத்தினார்கள். ஊழியர்கள் அனைவரும் பாடல்பாடி, நடனமாடி தேவனை துதித்து தேவ பிரசன்னத்தில் மூழ்கி தங்களை அர்ப்பணித்தார்கள்.

இம்முகாமில் **சகோ. G.P.S. ராபின்சன்,** (இயேசு சந்திக்கிறார், சென்னை) **Pr. ஜோசப் பாலசுந்தர்** (நல்ல சமாரியன் ஐக்கியம், மதுரை), **Pr. சகரியா ராபர்ட்** அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்கள். மூவரும் வல்லமையாக செய்தியைப் பகிர்ந்துக் கொண்டார்கள்.

இம்முகாமில் **“அப்போஸ்தலர் தோமா”** என்ற நாடகத்ததை 50 நிமிடங்கள் ஊழியர்கள் நடித்துக் காட்டி அனைவரையும் கண்ணீரோடு ஒப்புக் கொடுக்க வைத்தது மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது. இந்நிகழ்ச்சியை **சகோதரி வஹிதா தேவதாஸ்** அவர்கள் மிக நேர்த்தியாய் நடத்திக் கொடுத்தார்கள். **பிஷப். வே. தேவதாஸ்** அவர்கள் ஊழியங்களைக் குறித்து திட்டங்களையும் தரிசனங்களையும் பகிர்ந்து கொண்டதோடு, இறுதியில் கர்த்தருடைய பந்தியினை ஜெபித்து நடத்தினார்கள். அனைவரும் தங்களை அர்ப்பணித்து பயபக்தியுடன் கர்த்தருடைய பந்தியில் கலந்து கொண்டனர்.

இம்முகாமை நடத்த நிதி உதவி அளித்த **இயேசு விடுவிக்கிறார்** ஊழியங்களுக்காகவும், மற்றும் தேவ பிள்ளைகள் அனைவருக்காகவும் தேவனை துதிக்கிறோம்.

**9. சிறுவர்களின் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் : (Children Christmas Celebration)**

2015–ம் ஆண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாட்டம் டிசம்பர் 18ம் தேதி அந்தர்வேலியா CDC சிறுவர்கள் மற்றும் CSP பெண்கள் மற்றும் சபையின் விசுவாசிகளுக்கும் நடத்தப்பட்டது. இதில் சுமார் 600 பேர் பங்குப் பெற்று மகிழ்ந்தார்கள். பிள்ளைகள் நிகழ்த்தின கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளைப் பெற்றோர்கள் பார்த்து பரவசமடைந்தார்கள். **சகோ. டைட்டஸ்** அவர்கள் செய்தியளிக்க **சகோதரி. வஹிதா தேவதா**ஸ் அவர்கள் மொழி பெயர்த்தார்கள்.

டிசம்பர் 12–ம் தேதி இராஜஸ்தான் பிஜல்பூரில் உள்ள நமது பள்ளி மற்றும் விடுதி மாணவர்களுக்கும் ஊழியக்காரர்களின் பிள்ளைகள் மற்றும் ஞாயிறுப் பள்ளி ஆசிரியர் மற்றும் சிறுவர்கள் யாவருக்கும் கிறிஸ்துமஸ் விழா பெரிய பந்தல் போட்டு நடத்தப்பட்டது. இதில் சுமார் 600 பிள்ளைகள் பங்குப் பெற்றார்கள். இதில் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் கிறிஸ்துமஸ் செய்தியளித்து ஜெபித்தார்கள்.

அதே போன்று டிசம்பர் 13–ம் தேதி ஜெரி கிராமத்திலுள்ள சிறுவர்கள் மற்றும் சபையார் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதில் **சகோ. டைட்டஸ்** மற்றும் **சகோதரி. மெர்லின் டைட்டஸ்** இணைந்து கிறிஸ்துமஸ் கேக் வெட்டி, சிறுவர்களுக்கு கொடுத்து, விழாவை சிறப்பித்தார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் கிறிஸ்துமஸ்

செய்தி வழங்கினார்கள். சுமார் 400 பேர் பங்கு பெற்று கிறிஸ்துவின் பிறப்பின் பண்டிகையைக் கொண்டாடினார்கள். இதே போல் டிசம்பர் 19–ம் தேதி குஜராத் ஹிரோலா கிராமத்திலுள்ள சிறுவர்கள் மற்றும் CSP பெண்களுக்கும் சபை விசுவாசிகளுக்கும் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இதில் சுமார் 250 பேருக்கும் மேலாக பங்கு பெற்று ஆடிப்பாடி தேவனை மகிமைப்படுத்திக் கொண்டாடினார்கள். இந்நிகழ்ச்சிகளில் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் கிறிஸ்துமஸ் சிறப்பு செய்தியளித்து ஜெபித்தார்கள். மொத்தம் 1850 பிள்ளைகள் கலந்து தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள்.

**10. கிறிஸ்துமஸ் புத்தாடை வழங்குதல் : (Christmas Dress Distrbution)**

நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசிப் பிள்ளைகள் மற்றும் நமது ஊழியர்களின் பிள்ளைகள் 1750 பேருக்கும், Compassion என்ற திட்டத்தின் மூலம் தாங்கப்பட்டு வருகிற CDC பிள்ளைகள் 835 பேருக்கும், CSP திட்டத்தின் கீழ் பயன்பெற்று வரும் 120 பெண்களுக்கும் சேர்த்து மொத்தம் 2705 பேருக்கு புத்தாடைகள் வழங்கப்பட்டது. நமது ஷாலோம் ஊழியர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் மொத்தம் 695 குடும்பத்திற்கும் கிறிஸ்துமஸ் புத்தாடைகள் வழங்கப்பட அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

**11. கிறிஸ்துமஸ் கீத பவனி : (Christmas Carol Rounds)**

டிசம்பர் மாதம் முழுவதும் ஊழியர்கள் தங்கள் 650 சபைகளில் உள்ள விசுவாசிக் குடும்பங்களின் வீடுகளைச் சந்தித்து கீதப்பவனி சென்று கிறிஸ்துமஸ் பாடல்களை நடனத்துடன் ஆடிப்பாடி வாழ்த்துதல் கூறி தேவனை மகிமைப்படுத்தினது மட்டுமல்லாமல், பிற இன நண்பர்களுக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களைக் கூறி, சுவிசேஷம் அறிவிக்க தேவன் கிருபை செய்தார்.

**12. கிறிஸ்துமஸ் ஆராதனை மற்றும் கொண்டாட்டம் : (Christmas Service & Celeberation)**

2015 டிசம்பர் கிறிஸ்துமஸ் தினமான 25–ம் தேதியன்று ஷாலோம் திருமண்டலத்தின் 650 சபைகளிலும் விசேஷித்த ஆராதனை மற்றும் கொண்டாட்டம் நடைபெற்றது. அந்தந்தக் கிராம சபை மக்கள் தங்கள் கிராமத்திலுள்ள, இயேசுவை அறியாதவர்களையும் அழைத்து, கிறிஸ்துமஸ் ஆராதனையில் பங்கெடுக்க வைத்தார்கள். எல்லா சபைகளும் நிறைந்து வழிந்தது. ஆலயத்திற்குள்ளே போதுமான இடம் இல்லாததால் ஆலயத்திற்கு வெளியே பந்தல் போடப்பட்டு மிகவும் உற்சாகமாய் ஆடிப்பாடி கிறிஸ்துமஸ் கொண்டாடினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. “ஆங்காங்கே நகர்புறங்களில் கூலி வேலைக்குச் சென்றிருந்தவர்கள் யாவரும் கிறிஸ்துமஸ் அன்று தங்கள் சபைகளுக்கு வந்து கொண்டாடினார்கள். அநேக இடங்களில் ஆலயத்தில் சாப்பாடு மற்றும் இனிப்புகள் வழங்கப்பட்டது. காலை 10 மணியில் இருந்து மாலை 5 மணி வரை கொண்டாடினார்கள். **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குஜராத்தில் ரீசும்புரா மற்றும் தேவனியாவட் ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்து பிரதிஷ்டை செய்தார்கள். கட்டப்பட்ட புதிய ஆலயங்களில் விசுவாசிகள் சந்தோஷமாக கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடினார்கள்.

## VII. செயல் திட்டங்கள் (Projects)

### 1. சபை ஒருங்கிணைப்பு (Church Network)

வளர்ந்து வரும் ஷாலோம் ஊழியத்தில் சபைகள் விசுவாசிகள், ஊழியர்கள் பெருகி வரவே இதையெல்லாம் ஒழுங்கும் கிரமமுமாய் ஒருங்கிணைத்துச் செயல் படுத்தும்படியாய் சபை ஒருங்கிணைப்பு பணி நடைபெற்று வருகிறது.

### 2. சபை கட்டுமானப் பணி (Church Construction)

கடந்த ஆண்டில் மூன்று மாநிலங்களிலும் சேர்த்து மொத்தம் 54 ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளது. இதில் 48 ஆலங்கள் தேவ நாம மகிமைக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதுவரை ஷாலோம் ஊழியத்தின் மூலம் 322 ஆலயங்களைக் கட்டும்படியாக தேவன் கிருபை செய்தார். **தேவனுக்கே மகிமை!** இன்னும் 10 கிராம ஆலயங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2016ம் ஆண்டில் கர்த்தருக்குச் சித்தமானால் 200 கிராம ஆலயங்கள் கட்டப்பட ஜெபித்து வருகிறோம்.

### 3. பீல் ஆதிவாசி மாணவர் கல்விப்பணித் திட்டம் (Bhil Children Education Project)

குஜராத், மத்தியப்பிரதேசம் மற்றும் இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களிலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட பல்வேறு விசுவாசக் குடும்பங்கள் குறிப்பாக நம் சுதேச ஊழியர்களின் குடும்பங்களில் கல்வி கற்றும் வரும் பிள்ளைகளுக்காக சிறப்புத் திட்டங்கள் Shalom Charity Mission மூலமாகச் செயல்பட்டுவருகிறது. இதன் மூலம் மூன்று மாநிலங்களில் ஊழியம் செய்யும் ஊழியர்களின் பிள்ளைகள் 814 மாணவர்களும், மூன்று மாநிலங்களிலுள்ள மூப்பர்களின் பிள்ளைகள் 223 பேர்களும், 3 மாநிலங்களிலும் உள்ள பள்ளி மற்றும் விடுதியில் பயிலும் மாணவர்கள் 343 பேர்களும் கல்வி பயின்று வருகின்றனர். ஆக மொத்தம் 1380 பீல் ஆதிவாசி மாணவர்கள் தாங்கப்பட்டு வருகிறார்கள்.

இவர்கள் அருகே மற்றும் தொலை தூரங்களிலுள்ள நல்ல தரம் வாய்ந்த பள்ளிகூடங்களுக்கு அனுப்பப்பட்டு, ஆவிக்குரிய ஆசீர்வாதத்துடன் தரமான கல்வியறிவும் பெற்று வருகிறார்கள். இந்த 1380 மாணவர்களில் 987 மாணவர்களை ஜெபித்து மாதந்தோறும் ரூ. 700 கொடுத்துத் தாங்கும் ஆதரவாளர்கள் உள்ளனர். ஆனால் மீதமுள்ள 393 ஆதிவாசி மாணவர்களுக்கு ஜெபித்து மாதம் ரூ. 700 கொடுத்துத் தாங்கக்கூடிய ஆதரவாளர்கள் தேவை. இது மட்டுமல்ல, குறிப்பாக சுமார் 150 மாணவர்கள் 10, 11, 12 மற்றும் கல்லூரிகளிலும், ITC, Diplomo, Nursing போன்றவை படித்துவருவது குறிப்பிடத்தக்கது. மேற்படிப்பு படித்துவரும் சுமார் 150 மாணவர்களுக்கு அதிகமான நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

### 4. ஷாலோம் பள்ளி (Shalom Mission Middle School, Bijalpur, Raj)

கடந்த 14 வருடங்களாக பிஜல்பூரில் (இராஜஸ்தான்) நமது பள்ளிப் பணியை தேவன் ஆசீர்வதித்து வருகிறார். 8ஆம் வகுப்பு வரை அரசு அங்கீகாரம் பெற்ற நமது பள்ளியில் சுமார் 325 பிள்ளைகள் கல்விப் பயின்று வருகிறார்கள். படிப்பு, விளையாட்டு, ஒழுக்கம் மற்றும் தேவ அறிவில் முன்னேறி வருகின்றார்கள். ஆசிரியர்களும் நன்கு அர்ப்பணிப்போடு தங்களின் பணியைச் செய்து வருகிறார்கள். இவர்களுக்காக ஞாயிறு பள்ளி ஒழுங்காக நடத்தப்பட்டு வருவதோடு தினமும் காலையில் வேதபாட தியானமும் நடைபெற்று வருகிறது. வருடத்திற்கு ஒருமுறை இந்தப் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய முகாம் நடத்தப்படுகிறது. கடந்த ஆண்டு Sports Day Competition மற்றும் ஆண்டு விழாவும் நடத்தப்பட்டது.

**5. சிறுவர் முன்னேற்றப் பணி** (Child Development Centre (CDC))

Compassion India ஸ்தாபனத்தின் மூலமாக நாம் நடத்திவரும் CDC திட்டத்தின் மூலம் குஜராத், ஹிரோலா கிராமத்தில் 238 பிள்ளைகளும், குஜராத் ஜெரி கிராமத்தில் 276 பிள்ளைகளும், மத்தியப்பிரதேசம் அந்தர்வேலியா கிராமத்தில் 321 பிள்ளைகளும் சேர்த்து மொத்தம் 835 பிள்ளைகள் கல்விப் பயின்று வருகிறார்கள். இவர்களுக்கு உணவு, உடை, டியூசன் மற்றும் எல்லா உதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

**6. Children Survival Programme (CSP)**

Compassion India ஸ்தாபனத்தின் மூலமாக நாம் நடத்திவரும் CSP திட்டத்தின் மூலம் குஜராத்தில் ஹிரோலா கிராமத்தில் 50 கர்ப்பிணி பெண்கள் மற்றும் 3 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கும் மத்தியப்பிரதேசம் அந்தர்வேலியா கிராமத்தில் 70 கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் 3 வயதுக்குட்பட்ட சிறு குழந்தைகளுக்கும் உடல் ஆரோக்கிய நலச் சேவை கொடுக்கப்பட்டு வருகிறது. அதாவது கருவிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்படவும், பராமரிக்கப்படவும், நல்ல ஆரோக்கியத்துடன் வளர்க்கப்படவும், தடுப்பூசி மற்றும் சத்து மாத்திரைகளும் சத்துணவுகளும் இந்த சேவை மூலமாக வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் முழு கிராமத்தில் உள்ள விசுவாசி மற்றும் விசுவாசியல்லாத கர்ப்பிணிப் பெண்களும் பயன்பெற்று வருகின்றனர். இதன் மூலம் பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சி பெற்று அநேகப் பெண்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

**7. சமுதாய மறுரூபமாக்கல் பயிற்சி** (Institute of Community Transformation - ICT)

சேவா பாரத் ஸ்தாபனத்தின் மூலமாக கடந்த வருடம் குஜராத்தில் ஒரு unit, மத்தியப்பிரதேசத்தில் ஒரு Unit, இராஜஸ்தானில் இரண்டு unit, மொத்தம் நான்கு ICT Projects கிடைக்கப்பெற்று 40 இளம் ஊழியர்கள் நல்ல பயிற்சியைப் பெற்றார்கள். B.Th., முடித்த நம் ஷாலோம் போதகர்கள், இந்த நான்கு பயிற்சிகளுக்கும் இயக்குநர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருந்து மிகவும் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். இதற்கு முன்பு பயிற்சிப் பெற்ற குஜராத் ICT மாணவர்களுக்கு தெல்சர் கிராமத்தில் டிசம்பர் 10ம் தேதியும், மத்தியப்பிரதேசம் ICT மாணவர்கள் 10 பேருக்கு போபாலிலும் பட்டமளிப்பு விழா நடைபெற்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இராஜஸ்தான் ICT மாணவர்கள் 10 பேருக்கு பேடவ் கிராம ஆலயத்தில் பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

**8. குடிநீர் வசதித் திட்டம்** (Hand Pump Projects)

CBN ஸ்தாபனத்தின் மூலம் ஒவ்வொரு ஆண்டும், பீல் மக்கள் வசிக்கும் கிராமங்களில், குடிநீர் மிகவும் தட்டுப்பாடுள்ள கிராமங்களில் ஆழ்குழாய் கிணறு (Hand Pumps) போடப்பட்டு குடி நீர் வசதி செய்து தரப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு குஜராத்தில் 13 கிராமங்களிலும், இராஜஸ்தானில் 15 இடங்களிலும் ஆக மொத்தம் 28 இடங்களிலும் Hand Pumps போடப்பட்டன. மிகவும் உள்ளடங்கிய வண்டிகள் கூட போக முடியாத பகுதிகளிலும் மிகுந்த சிரமத்தோடு கூட, சிறந்த முறையில் ஆழ்குழாய் கிணறுகள் போட கர்த்தர் ஒத்தாசை அருளினார். எல்லா இடங்களிலும் நன்றாக தண்ணீர் கிடைக்கப்பெற்று, தேவனை மகிமைப்படுத்தினார்கள். இதுவரை 300க்கும் அதிகமான கிராமங்களில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

**9. சிறப்பு ஆத்தும அறுவடைத் திட்டம்** (Special Soul Winning Project)

தெரிந்து கொள்ளப்பட்ட 48 ஊழியர்கள் குடும்பமாக ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் சுகமளிக்கும் கூட்டம் நடத்துகிறார்கள். ஒவ்வொரு மாதமும் 3 வெள்ளிக் கிழமைகளில் 16 இடங்கள் வீதம் 48 இடங்களில் கூட்டங்கள் நடைபெறுகிறது. தேவன் இந்த ஊழியர்களை

வல்லமையாய் அற்புத அடையாளங்களுடன் பயன்படுத்தி வருகிறார். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் புதிய ஆத்துமாக்கள் வந்து விடுதலையையும் சுகத்தையும் பெற்றுக் கொள்கிறார்கள். கடந்த 2015 ஆம் ஆண்டில் 381 கிராமங்களில் சுகமளிக்கும் கூட்டங்கள் நடைபெற்றன. இந்தக் கூட்டங்களில் பங்குபெற்றோர் மொத்தம் 56808 பேர். இதன் விளைவாக 1532 புதிய ஆத்துமாக்கள் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். மேலும் 7494 பேர் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிரப்பப்பட்டனர். மேலும் 5655 சாட்சிகளை தேவன் எழுப்பியுள்ளார்.

**10. இலக்கியம்** (Literature Project)

கடந்த ஆண்டு 650 சபைகளுக்கும் சபை விசுவாசிகளுக்கும் வேதாகமங்கள் ஆவிக்குரிய புத்தகங்கள், ஆடியோ வீடியோ சிடிக்கள் மற்றும் ஆலயங்களுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் கிறிஸ்துமஸ் அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

**11. மிஷனெரி பிரதிஷ்டைகள்** (Missionaries Dedications)

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த 2015ம் ஆண்டு குஜராத், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலுமுள்ள நமது ஷாலோம் பீல் சுதேச ஊழியர்கள் பணித்தளங்களிலிருந்து மொத்தம் 16 ஷாலோம் சுதேச ஊழியர்கள் தமிழ்நாட்டிற்கு வரவழைக்கப்பட்டு, பிரதிஷ்டை செய்யப்பட்டு, புதிய அர்ப்பணிப்புடனும், தரிசனத்துடனும், திரும்பிச் சென்று ஊழியம் செய்து வருகின்றனர். அவர்களை ஜெபித்துத் தாங்கவும், பிரதிஷ்டை செய்யவும் முன்வந்த, சபைகள், போதகர்கள், ஜெபக்குழுக்கள், மற்றும் குடும்பத்தார் அனைவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**12. ஒலி நாடாக்கள் & பாடல் புத்தகங்கள் வெளியீடு** (CDs & Song Books)

கடந்த 2015ம் ஆண்டு சிறுவர்களுக்கென பாடல்கள் அடங்கிய Audio CD நிலைத்திரு என்ற தலைப்பில் வெளியிடவும், ஷாலோம் ஹிந்தி பாடல்கள் கொண்ட புத்தகம் வெளியிடவும் தேவன் கிருபை செய்தார். இந்தப் புத்தகம் ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாமில் ஜெபித்து வெளியிடப்பட்டது.

**13. விசுவாசக் குடும்பங்களுக்கு வேதாகமம் வழங்குதல்** (Bible Project)

கடந்த 2015ம் ஆண்டு சுமார் 7000க்கும் அதிகமான வேதாகமங்கள் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத் கிளையில் வாங்கப்பட்டு சபை விசுவாசிகளுக்கு விநியோகிக்கப்பட்டது. ஒவ்வொரு வருடமும் இந்திய வேதாகமச் சங்கத்திலிருந்து வேதாகமம் அதிகமாய் விநியோகித்த ஸ்தாபனத்திற்கு விருந்து கொடுக்கப்படும். ஒவ்வொரு வருடமும் ஷாலோம் ஊழியத்திற்கு அந்த விருது கிடைப்பது மிகவும் சந்தோஷமான காரியமாகும். அதேபோல் கடந்த 2015ம் வருடமும் இந்திய வேதாமகச் சங்கம் குஜராத் கிளையிலிருந்து இந்த விருது நமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

**14. ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை** (Sharon Memorial Mission Hospital)

தேவ கிருபையாலும் அவருடைய தீர்மானத்தின்படியும், ஷாரோன் நினைவு மிஷன் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு சிறந்த முறையில் மருத்துவ பணிகள் நடைபெற்று வருகிறது. **Dr. இன்பக்குமார் ஜோசப்** அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதன் மூலம் ஷாலோம் விசுவாசிகள் மட்டுமல்லாமல் மற்ற மக்களும் பயனடைந்து வருகின்றனர். கடந்த ஆண்டில் 2140 நோயாளிகள் நமது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பயனடைந்தார்கள். **தேவனுக்கே மகிமை!**



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 29

**பதில் எழுதுக :**

(குறிப்பு : விடைகளை ஆதியாகமம் முதல் உபாகமம் வரை மட்டும் கண்டு பிடிக்கவும்)

1. எகிப்தியனை அருவருக்கக் கூடாது ஏன்?
2. சித்திரத் தையல் வேலை செய்கிறவன் யார்?
3. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய் துரோகம் பண்ணக் காரணமாயிருந்தது யார்?
4. இச்சித்த ஜனங்களை அடக்கம் பண்ணின ஸ்தலம் எது?
5. 60 பட்டணங்களுள்ள தேசம் எது?
6. யார் சொல்லுகிறது சரிதான் என்று மோசே சொன்னான்?
7. கர்த்தர் தமது கோபத்திலும் தமது உக்கிரத்திலும் கவிழ்த்துப் போட்டது எவைகளை?
8. ஏதோமியருடைய தகப்பன் யார்?
9. உன் கனத்தில் கொஞ்சம் கொடு என்று மோசேயிடம் யாருக்குக் கொடுக்க கர்த்தர் சொன்னார்?
10. விடுதலைப் பெற்ற பெண் மான் யார்?

**வேதவினாப் போட்டியில் பங்கு பெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில்களை மட்டும் தெளிவாக எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **17.02.2016**

**கடந்த டிசம்பர் மாத வேத வினா போட்டி எண் 28க்கான சரியான விடைகள்**

1. உப்புக்கடல் – ஆதி. 14 : 3
2. கர்த்தரின் கட்டளையை மீறுகிறதினால். – எண். 14 : 41, 42
3. நாதாபும், அபியூவும் – எண். 24 : 9
4. பிலேயாம், இஸ்ரவேல் கோத்திரங்களைப் பார்த்து – எண். 24 : 9
5. ஏபால். உபா. 27 : 13
6. பெஞ்சமின். உபா. 33 : 12
7. மோசே. யாத். 6 : 12
8. யோசேப்பு, தன் சகோதரனைப் பார்த்து. –ஆதி. 45 : 24
9. ரெகுவேலின் குமாரன் ஒபாவைப் பார்த்து. – எண். 10 : 29,32
10. பட்டயத்தினால். எண். 31 : 8

**கடந்த டிசம்பர் மாத வேத வினாப் போட்டி எண் 28 இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 20 நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

1. Sis. பாலின் ஜோன்ஸ், தூத்துக்குடி. 2. Sis. இமாகுலேட், தூத்துக்குடி.
3. Sis. கில்டா வேதநாயகம், மதுரை

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468

வாசகர்கள் தங்கள் பதில்களை **9345675468 –** என்ற மொபைல் எண்ணிற்கு **SMS** மூலமாகவோ **Whats App** மூலமாகவோ அனுப்பலாம் அல்லது **magazine@shalommission.in** என்ற ஈ–மெயிலிலும் அனுப்பலாம்.

# ஜெபக்குறிப்புகள்...



**பீல் மக்கள் இரட்சிப்பிற்காக...**

◎ குஜராத், இராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 1 கோடிக்கும் அதிகமான பீல் ஆதிவாசி மக்கள் வாழ்கின்றனர், அவர்கள் அனைவரும் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

**பணித்தளங்களில் நடைபெற்று வரும் ஊழியங்களுக்காக...**

◎ 660க்கும் அதிகமான சபைகளுக்காக, 322க்கும் அதிகமான ஆலயங்களில் நடைபெற்று வரும் ஆராதனை மற்றும் இதர ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ மூப்பர், பெண்கள், ஊழியர்கள் ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வாலிபர் மற்றும் சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் ஓய்வு நாள் பள்ளிகள், CBC ஊழியங்கள் சிறுவர் மற்றும் வாலிபர் முகாம்களுக்காக ஜெபியுங்கள்.

◎ வெள்ளிதோறும் நடைபெறும் அற்புத சுகமளிக்கும் கூட்டங்களுக்காக ஜெபியுங்கள்.

**பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்காக...**

◎ **பேராயர் தேவதாஸ்** மற்றும் அவரது மனைவி **சகோதரி வஹிதா தேவதாஸ்** ஆகியோருக்காகவும், தேவன் அவர்களுக்கு முழு பீல் மக்களுடைய இரட்சிப்பின் பணியில் தம்முடைய திட்டங்களையும் தரிசனங்களையும் தரவும், அவற்றை செயல்படுத்த நல்ல ஞானத்தையும், சுக, பெலன், ஆரோக்கியத்தினை தரவும், போக்கையும் வரத்தையும் பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

◎ Compassion Project மற்றும் Shalom Charity Mission ஆகியவற்றை நிர்வகிக்கும்படியாக பொறுப்பேற்றுள்ள **சகோ. டைட்டஸ்** மற்றும் **மெர்லின்** அவர்களையும், பேராயர் அவர்களின் பேரன் **Zion Kryston** க்காகவும், M.A. (Media) பயின்று வரும் **சகோ. ஷாலோம்** அவர்களையும் தேவன் ஆசீர்வதித்து உருவாக்க ஜெபியுங்கள்.

◎ ரஷ்யாவில் மருத்துவப் படிப்பு பயின்று வரும் சகோதரி ஷெக்கினா அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், படிப்பினை முடித்து பீல் மக்களுக்கு ஆசீர்வாதமாக தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் ஊழியர்களுக்காக...**

◎ 580 க்கும் அதிகமான பீல் சுதேச ஊழியர்களுக்காகவும் அவர்கள் குடும்பத்திற்காகவும், தேவன் அவர்களை வல்லமையாகப் பயன்படுத்தவும், அவர்கள் தேவைகள் சந்திக்கப்படவும், அவர்களது பிள்ளைகளின் படிப்பிற்காகவும் ஜெபியுங்கள்.

◎ பீல் ஆதிவாசி சிறுவர்கள் மத்தியில் நடைபெறும் சுவிசேஷ ஊழியம், Compassion Project மற்றும் Training Unit –ல் பணிபுரியும் ஊழியர்களுக்காகவும், தேவன் அவர்களுக்கு நல்ல ஞானத்தையும், கிருபையையும் தந்து ஆசீர்வதிக்கவும் ஜெபியுங்கள்.

- ◎ தூத்துக்குடி தலைமை அலுவலகம், குஜராத் பணித்தள அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் பணிபுரியும் ஊழியர்கள் பாதுகாவலுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஷாலோம் சேரிட்டி மிஷன்...**

- ◎ ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் பீல் ஆதிவாசி ஜனங்களின் கல்வி, மருத்துவம், குடிநீர் வசதிகளுக்காகவும், பொருளாதார முன்னேற்றப் பணிகளுக்காகவும், நம் ஊழியத்தை செய்கிற தேவ பிள்ளைகளின் ஆசீர்வாதங்களுக்காகவும் ஜெபியுங்கள்.
- ◎ ஷாலோம் விடுதிகளில் தங்கி பயின்றுவரும் 1248க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காகவும், அவர்களை தேவன் ஆசீர்வதித்துப் பாதுகாக்கவும், நல்ல ஞானத்தையும், சுகம், பெலனையும் தேவன் சிறுவர்களுக்குக் கொடுக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.
- ◎ Teacher Training, Engineering, Medical & ITI போன்ற உயர்கல்வி கற்கவிருக்கும் பிள்ளைகளுக்காகவும், அவர்களின் கல்வித் தேவைகளை தேவன் சந்திக்கவும் ஜெபியுங்கள்.
- ◎ எதிர்காலத்தில் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு தேவன் நல்ல வேலை வாய்ப்பினைத் தந்து சமுதாயத்தில் உயர்த்தி ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

**ஷாலோம் திருமண்டலத்திற்காக...**

- ◎ ஷாலோம் திருமண்டலத்தின் கீழ் இயங்கி வரும் திருச்சபை பணிகளுக்காக, திருச்சபை ஒருங்கிணைப்பு பணிகளுக்காக ஜெபியுங்கள்.
- ◎ இதுவரை கட்டப்பட்டுள்ள 320 கிராம ஆலயங்களுக்காக, திருச்சபைகள் வளர்ந்து பெருகவும் அநேக ஆத்துமாக்கள் திருச்சபைக்கு வரவும், திருச்சபையில் தேவன் அநேக அற்புத அடையாளங்கள் செய்யவும் ஜெபியுங்கள்.
- ◎ கட்டப்பட்டு வரும் கிராம ஆலயப் பணிகள் தடைகளின்றி நிறைவு பெறவும், ஆலயம் அவசியமாகத் தேவைப்படும் கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்படவும், அதற்கான ஆதரவாளர்கள் கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள்.

**40 நாள் உபவாச ஜெபம்**

- ◎ நமது ஷாலோம் பணித்தளத்தில் பிப்ரவரி 10ம் தேதி முதல் 40 நாள் உபவாச ஜெபம் நடைபெறவுள்ளது. இந்த உபவாச ஜெபத்தை அனுசரிக்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள் மற்றும் ஊழியர்கள் அனைவருக்காவும் ஜெபியுங்கள். இந்த நாட்கடளில் தேவன் அவர்களுக்கு நல்ல கிருபையையும் பாதுகாவலையும் பெலத்தையும் தர ஜெபியுங்கள்.

**கிராம ஆலயங்களுக்காகவும்**

- ◎ இந்த 2016ம் ஆண்டின் இறுதிக்குள்ளாக நம் ஷாலோம் பணித்தளத்தில் 200 கிராம ஆலயங்கள் கட்டியெழுப்பப்படவும், கட்டப்பட்டுவரும் கிராம ஆலயங்களின் பணிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், தடைகளை நீக்கவும், தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.




***பிரியமானவர்களே!*** *நமது ஷாலோமின் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை கீழ்க்காணும் தொலைக்காட்சி சேனல்களிலும் கண்டு தேவனைத் துதியுங்கள்!*

| | |
|---|---|
| ஹெவன் Heaven tv | **நாகர்கோவில் – ஞாயிற்றுக்கிழமை**<br>**மாலை 5.00 மணி முதல் 5.30 வரை** |
| **ARK T.V.** | **நாகர்கோவில் – திங்கள் கிழமை**<br>**மாலை 9.30 மணி முதல் 10.00 வரை** |
| ஹெவன் Heaven tv India | **சென்னை – ஞாயிற்றுக்கிழமை**<br>**மாலை 5.00 மணி முதல் 5.30 வரை** |
| HOPE | **தூத்துக்குடி – ஞாயிற்றுக்கிழமை**<br>**மாலை 5.00 மணி முதல் 5.30 வரை** |
| **CROSS T.V.** | **தூத்துக்குடி – திங்கள் கிழமை**<br>**மாலை 7.30 மணி முதல் 8.00 வரை** |

## ஷாலோம் ஆதரவாளர்களுக்கு ஓர் அறிவிப்பு

அன்புள்ள ஷாலோம் ஆதரவாளர்களுக்கு, இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் வாழும் பீல் ஆதிவாசி சிறுவர்களுக்கு உணவு, உடை, உறைவிடத்துடன் கல்வி மற்றும் உயர்கல்வியினை அளித்து அவர்கள் சமுதாயத்தில் முன்னேறப் பாடுபடுவதோடு, பீல் ஆதிவாசி ஜனங்களுக்கு இலவச மருத்துவச் சேவை மற்றும் இதர சமுதாய முன்னேற்றப் பணிகளை நிறைவேற்றிவரும் **Shalom Charity Mission** க்கு அரசாங்கத்திடமிருந்து **“வருமான வரிவிலக்குச் சான்று” (80G)** 17.07.2013 முதல் கிடைக்கப் பெற்றுள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம்.

சமுதாய முன்னேற்றப் பணி, பீல் ஆதிவாசி சிறுவர் முன்னேற்றப்பணி, மற்றும் மருத்துவ பணிக்குக் காணிக்கை அனுப்பும் ஆதரவாளர்கள் இந்த வருமான வரிவிலக்கினை கேட்டுப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

# ஜனவரி - 2016 ஷாலோம் பணித்தள ஊழியங்கள் ஓர் அறிக்கை

தேவ கிருபையால் ஜனவரி 7,8,9 தேதிகளில் மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் ஷாலோம் சுதேச ஊழியர்கள் குடும்ப புத்தாண்டு கூடுகைகள் மற்றும் ஜனவரி 17 ஞாயிற்றுக்கிழமை மாலையில் அனைத்து அலுவலக, Project Staff- க்கான புத்தாண்டு கூடுகை மிக ஆசீர்வாதமாக நடைபெற்றது. **"கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்"** சங்.128:5 வாக்குத்தத்த செய்தியை **பேராயர் தேவதாஸ்** அவர்கள் வழங்கினார்கள். **சகோதரி. வஹிதா தேவதாஸ்** புதுவருடத்தில் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை மற்றும் ஊழிய பாதையில் கடைபிடிக்க வேண்டிய 10 காரியங்களை வேதவசனத்தின் அடிப்படையில் பகிர்ந்து கொண்டபோது அனைவரும் தங்களை தேவனுக்காக ஒப்புக் கொடுத்தார்கள்.

பேராயர் குடும்பத்துக்கு சிறப்பு வரவேற்பும், ஜெபங்களும் ஏறெடுத்தார்கள். சுதேச ஊழியர் குடும்பங்கள் உற்சாகமாக தேவனுக்கு காணிக்கைகளை படைத்தார்கள். 2016ம் புதிய ஆண்டான வெள்ளி விழா ஆண்டில் தேவன் தந்த திட்டமான 1000 சுதேச ஊழியர்கள், 1000 ஸ்திர ஷாலோம் சபைகள் மற்றும் 1 இலட்ச குடும்பங்களை தேவனண்டை நடத்த சபைகளை ஒப்புக்கொடுத்து திருவிருந்து ஆராதனையுடன் தேவபிரசன்னத்துடன் நிறைவு பெற்றது. அனைவருக்கும் அன்பின் விருந்தும் வழங்கப்பட்டது.

- ☞ ஜனவரி 19,20,21 நாட்களில் மூத்த சபை போதகர்கள் 30 பேர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி அளிக்கப்பட்டது. குறிப்பாக பீல் மக்கள் தரிசனத்தை குறித்த சரியான விளக்கமும், செயல்படும் முறைகளை குறித்து திட்டங்கள் வகுக்கப்பட்டது. **Dr. Jay Clark** மற்றும் **Dr. Abel, Dr. Jolly** அவர்கள் சிறப்புடன் நடத்தி தந்தார்கள்.
- ☞ ஜனவரி 20,21,22 நாட்களில் இராஜஸ்தானில் 3 இடங்களில் உள்ள சபைகளில் உள்ள சிறுவர்களுக்கான சிறப்பு முகாம்கள் நடைபெற்றது.
- ☞ ஜனவரி 23,24; 30,31 தேதிகளில் ஓய்வுநாள் பாடசாலை ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சி கூடுகை நடைபெற்றது.
- ☞ ஜனவரி 28,29,30 தேதிகளில் 60 புதிய பீல் சுதேச ஊழியர்களுக்கான 3 நாட்கள் Orientation Programme (ஊழிய ஆயத்த பயிற்சி கூடுகை) நடைபெறுகிறது.
- ☞ ஜனவரி 18,22,26,27 தேதிகளில் 3 மாநிலங்களில் உள்ள பீல் சுதேச ஊழியர்கள், போதகர் மனைவிமார்களுக்கான புத்தாண்டின் ஊழிய தரிசன கூடுகை மற்றும் அக்கினி அபிஷேக கூடுகை **சகோதரி. வஹிதா தேவதாஸ்** தலைமையில் நடைபெறுகிறது.

## தேர்வெழுதும் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம்

| | |
|---|---|
| நாள் :<br>**13.02.2015,** சனிக்கிழமை | இடம் : **ஷாலோம் மார்த்தாண்டம் கிளை அலுவலகம்**<br>M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்** |
| தேர்வெழுதும் மாணவர்களுக்கான சிறப்பு ஜெபம் & ஆலோசனை | **சகோ. J. அற்புதராஜ் மர்காஷிஸ்,** தூத்துக்குடி |

தொடர்புக்கு : **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869, **சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405
**சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

## தமிழகத்தில் நடைபெற்ற இதர ஊழியங்கள்

**உபவாச ஜெபம் – 06.01.2016, நாசரேத்.**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த **06.01.2016** அன்று நாசரேத், இந்திய எழுப்புதல் சபையில் ஜெபத்தின் மூலம் எழுப்புதல் (இரட்சிப்பு) என்ற தலைப்பில் நடைபெற்ற உபவாச ஜெபத்தில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் தலைமை அலுவலக ஊழியர்கள் கலந்து கொண்டனர். இதில் **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொண்டார்கள். வாய்ப்பளித்த சபை போதகர் காலம் சென்ற **Pr. ராஜாசிங்** அவர்களுக்காகவும் அவரது மனைவி மற்றும் மகன் **Pr. பிளசிங்** அவர்களுக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

**ஞாயிறு ஆராதனை – 10.01.2016, அகஸ்தியர்பட்டி, பொன்னகர்.**

தேவனுடைய பெரிதான கிருபையினால் கடந்த **10.01.2016** அன்று அகஸ்தியர்பட்டி பொன்னகர் CSI St. John's தேவாலயத்தில் நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் ஊழியர்கள் கலந்து கொண்டார்கள். இந்த ஆராதனையில் ஷாலோம் ஊழியங்களைக் குறித்த வீடியோ படக்காட்சி ஒளிபரப்பப்பட்டது. பின்னர் தேவனுடைய வார்த்தையை **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகருக்காகவும், சபையார் அனைவருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

---

## ஷாலோம் மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை

### வாழையூத்துவயல் – 20.12.2015

தேவனுடைய பெரிதான கிருபையினால், வாழையூத்து வயல், CSI சபையில் 20.12.2015 அன்று நடைபெற்ற ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் சுதேச ஊழியர் **சகோ. துல்சிங் பபேரியா** (ராம்கட், மத்தியப்பிரதேசம்) அவர்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இந்த ஆராதனையில் மிஷனெரி தனது அனுபவ சாட்சியினை பகிர்ந்து கொண்டார். **சகோ. செல்வதுரை** அவர்கள் ஆண்டவருடைய வார்த்தையை பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. சாம் குணசீலன்** அவர்கள் ஷாலோம் ஊழியங்களைக் குறித்துப் பகிர்ந்து கொண்டார்கள். இந்த மிஷனெரி பிரதிஷ்டைக்கு வாய்ப்பளித்த சபை போதகர் **Pr. ஸ்டீபன்** அவர்களுக்காகவும் ஊழியரைத் தாங்க முன் வந்த சபையாருக்காகவும் தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

### ஷாலோம் ஜெபக்குழு

**பிரியமானவர்களே!** ஒவ்வொரு மாதமும் 2வது சனிக்கிழமை மாலை 6.00 மணிமுதல் 8.00 மணி வரை நம் தூத்துக்குடி ஷாலோம் தலைமை அலுவலகத்தில் வைத்து சிறப்பு ஜெபம் நடைபெறுகிறது. ஆதரவாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு தேவாசீர்வாதம் பெற அன்புடன் அழைக்கிறோம்.

## சிறப்பு பணிகளும் திட்டங்களும்

தேவ கிருபையால் இந்த 25ம் வெள்ளிவிழா ஆண்டில் அனைத்து 580 பீல் சுதேச ஊழியர்கள் ஆளுக்கொரு புதிய சுதேச ஊழியர்களை எழுப்பவும்; ஒரு புதிய சபையை உருவாக்கவும்; ஒவ்வொரு சபையில் உள்ள விசுவாசி குடும்பங்கள் குறைந்தது 4 குடும்பங்களை இயேசுவண்டை வழி நடத்தவும் தீர்மானித்து ஜெபித்து செயல்பட எங்களுடன் அர்ப்பணித்து உள்ளார்கள். ஆகவே 25ம் வெள்ளி விழா ஆண்டு முடிவடையும் போது 2016 இறுதிக்குள் 1000 பீல் சுதேச ஊழியர்கள்; 1000 கிராம சபைகள் மற்றும் ஒரு இலட்ச விசுவாச குடும்பங்களை தேவ நாமம் மகிமைப்பட பெற்றுக் கொள்வோம் என விசுவாசிக்கிறோம். ஆகவே இந்த ஆண்டின் ஊழியங்களுக்காக, சிறப்புத் திட்டங்களுக்காக ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.


சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கும் பீல் ஆதிவாசி ஜனங்கள்

## வெள்ளி விழா ஆண்டு சிறப்பு கட்டிடப் பணி திட்டங்கள்

### ஷாலோம் பவன், தாகோத் – குஜராத். (Shalom Bhavan, Dahod - Gujarat)

தேவ கிருபையால் உருவாக்கப்பட்ட 25 வருட பணிகளை நிர்மானிக்கவும் செயல்படுத்தவும் குஜராத்தில் தாகோத்தில் பணித்தள அலுவலகம் உள்ளது. இந்தக் கட்டிடம் சுமார் 3600 சதுர அடி நிலத்தில் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடமாகும். இதை உடைத்து விட்டு, கீழ்க்காணும் அனைத்து துறைகளும் (Departments) ஒருங்கிணைந்து செயல்பட ஷாலோம் பவன் கட்டிடத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.



ஷாலோம் பவன் மாதிரிப்படம்

- 3 மாநில திருச்சபைகளின் ஒருங்கிணைப்புப் பணி (Shalom Diocese / Synod Network)
- சபை வளர்ச்சிக்கான அனைத்துப் பயிற்சிகளின் திட்ட மையம் (Training Unit)
- ஊழியர் பயிற்சி, வேதாகமப் பயிற்சி, ஓய்வுநாள் பள்ளி மற்றும் VBS பயிற்சிகள்.
- நிதித்துறை வளர்ச்சி. (Finance Department Audio / Video Studio & Recording Centre.
- தகவல் தொடர்புத் துறை. (Communication – மாத பத்திரிகை, மாத அறிக்கை, ஆலய அறிக்கை, சுதேச ஊழியர் அறிக்கை & மாணவர்கள் அறிக்கை)
- பீல் மக்களுக்காகவும், தேசத்திற்காகவும் 24 மணி நேரமும் ஜெபிக்க ஷாலோம் ஜெப மையம்.
- Conference Hall – குறைந்தது 100 பேர்கள் கூடி ஜெபித்து திட்டமிட.
- Literature, CD/ VCD, வசன அட்டைகள் மற்றும் ஆலயத்திற்குத் தேவையான பொருட்களை விற்கக்கூடிய இலக்கிய சேவை பிரிவு.
- ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் கல்விப்பணி, மருத்துவப் பணி மற்றும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்கான அலுவலகம்.
- Sponsor Related Department.
- Car & Two Wheeler Parking வசதி.
- பேராயர் மற்றும் பேராயர் அம்மா அவர்களுக்கான அலுவலக அறைகள்.
- மேலும் இதர பணிகள்....

## ஷாலோம் பேராலயம், அந்தர்வேலியா – மத்தியப்பிரதேசம்


இந்நாட்களில் மத்தியப்பிரதேசத்தில் பீல் மக்கள் மத்தியில் எழுப்புதலை கட்டளையிட்டு வருகிறார். ஊழியர்கள் கூடுகை, மூப்பர்கள் கூடுகை, வாலிபர் கூடுகை, சிறுவர்கள் முகாம், எழுப்புதல் முகாம்கள், ஜெபமுகாம்கள் மற்றும் பகுதிவாரிய திட்டக் கூடுகைகளை நடத்த அந்தர்வேலியா கிராமத்தில் தேவன் நமக்கு சுமார் 2 ஏக்கர் நிலத்தை தந்துள்ளார். அங்கு 120 X 40 அளவில் Hall ஒன்றும் மேலும் தேவையான அறைகள் கட்டப்பட Compound wall கட்டப்பட இரண்டு ஊழியர்கள் தங்கியிருக்க, ஜெப ஊழியங்கள் நடத்தப்பட கட்டிடங்கள் வேண்டும்.



## ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி, பிஜல்பூர் – இராஜஸ்தான்

தேவ கிருபையால் 30 பிள்ளைகளுடன் சிறிய வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஷாலோம் பள்ளி இன்று இராஜஸ்தானில் பிஜல்பூர் கிராமத்தில் 1 முதல் 8 வரை வகுப்புகள் நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. குறிப்பாக நம் இராஜஸ்தான் ஊழியர்கள், மூப்பர்கள் பிள்ளைகள் 300க்கும் அதிகமாக படித்து வருகிறார்கள்.

கட்டப்பட்ட சிறிய அறைகளில் தான் பள்ளி வகுப்புகள் உள்ளது. பகலில் வகுப்பறையாகவும் இரவில் தங்கும் அறையாகவும் உபயோகித்து வருகிறார்கள். வெள்ளிவிழா ஆண்டில் பள்ளிக்கூடத்துக்கு 10 அறைகள் மற்றும் 100 பெண் பிள்ளைகளுக்கான விடுதி அறைகள் கட்டப்பட வேண்டும்.



ஷாலோம் மிஷன் பள்ளி மாதிரிப்படம்,
பிஜல்பூர், இராஜஸ்தான்.

**மேற்கண்ட 3 வெள்ளி விழா திட்டங்களை நிறைவேற்ற ரூ. 300 இலட்சங்கள் தேவைப்படுகிறது**

- ரூ. 1 இலட்சம் கொடுக்கக்கூடிய 300 ஆதரவாளர்கள் (அல்லது)
- ரூ. 50 ஆயிரம் (அல்லது) ரூ. 20 ஆயிரம் (அல்லது) ரூ. 10 ஆயிரம் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்கள் (அல்லது)
- தங்களால் முடிந்த காணிக்கையைக் கொடுக்கக் கூடிய ஆதரவாளர்களை குடும்பமாக, குழுவாக, ஊழியங்களாக, சபைகளாக தேவன் எழுப்பும்படியாக ஜெபியுங்கள்.

மேலும் மாபெரும் வெள்ளிவிழா திட்டத்திற்கென உங்களால் முடிந்த நிதி உதவியை ஜெபித்து **"ஷாலோம் வெள்ளிவிழா திட்டத்திற்கான நிதி உதவி"** என குறிப்பிட்டு அனுப்பவும். ஜெபித்து கொடுக்கக்கூடிய புதிய ஆதரவாளர்களை அறிமுகம் செய்து வெள்ளிவிழாத் திட்டங்களை நிறைவேற்ற முன் வாருங்கள்.

**"....எழுந்து கட்டுவோம் வாருங்கள் என்று சொல்லி, அந்த நல்லவேலைக்குத் தங்கள் கைகளைத் திடப்படுத்தினார்கள்."** நெகே. 2:18

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை **E.M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு **D.D.** அல்லது **Cheque** எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவுத் தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, **Net Transfer** மூலமாகவும் காணிக்கைகளை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலம் **Deposit** பண்ணலாம்.
- எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

AXIS BANK
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

ICICI Bank
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் **Cash (or) Cheque (or) D.D.** மூலமாகவோ அல்லது **Net Transfer** மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை e-mail, Phone, SMS, Whats app மூலமாக எங்களுக்குத் தெரிவியுங்கள். தொடர்புக்கு : **9345675468**

## உங்கள் ஜெப உதவிக்கு
## ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE**

**SHARING LOVE MISSION,**

New No. 5A/323, Old No. 5/168,-3rd Street, Caldwell Colony,
TUTICORIN-628008 Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

| | |
|---|---|
| **CHENNAI BRANCH OFFICE**<br>**Bro. John Jeyasingh**<br>No.102-2nd Main Road<br>Sathya Nagar, Padi,<br>CHENNAI - 600050.<br>Cell : 9698244577 | **MARTHANDAM BRANCH OFFICE**<br>**Bro. Selvadurai.G**<br>M.T.N. Building, North Street,<br>Near Women's Police Station,<br>Marthandam, K.K. Dist. - 629165<br>Cell : 9487689869, 9698844511 |
| **MUMBAI BRANCH OFFICE**<br>**Bro. Jacob. N.**<br>Bathani Bhavan,<br>Room No. 11, First Floor,<br>R. No. 2, Gate No. 6,<br>Malvani, Malad West,<br>Mumbai - 400095<br>Cell : 09819554974 | **NAGERCOIL BRANCH OFFICE**<br>**Bro. Robinson. S.**<br>Ebenezer Plaza, Parama Street,<br>WCC Junction,<br>Nagercoil - 629001<br>Cell : 9688144522, 9688444522 |
| **MADURAI BRANCH OFFICE**<br>**Bro. Chandra Paul. S**<br>6/3, Nellaiappar Puram 7th Street,<br>Tirunagar (p.o)<br>MADURAI-625006<br>Cell : 9698644522 | **TIRUNELVELI BRANCH OFFICE**<br>**Bro. David. R**<br>56 A/4,-C.S.I Church South Street,<br>(Upstairs) STC road,<br>Perumalpuram, Palayamkottai<br>TIRUNELVELI-627007<br>Cell 9698844599 |

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும்**
**சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

வங்கிக் கணக்கின் பெயர் : **SHALOM CHARITY MISSION**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

TMB
Tamilnad Mercantile Bank

**174100710400061**
**Branch : Tiruchendur Road**
(IFS Code : TMBL0000174)

AXIS BANK

**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

விண்வெளி பயணத்தை முடித்த பின்னர் ராக்கெட்டை மீண்டும் தரையில் பாதுகாப்பாக இறக்கும் சாதனையை தனியார் நிறுவனமான விண்வெளி தொழில்நுட்ப நிறுவனம் ஸ்பேஸ்–X படைத்துள்ளது. அதன் ஃபால்கன் – 9 கலம் செங்குத்தாக தரையிறக்கப்பட்டது. ராக்கெட்டுகளை மீண்டும் பயன்படுத்துவதற்கான திட்டத்தில் இது ஒரு பெரிய முன்னேற்றமாகும்.

---

நீழ்மூழ்கி கப்பல்களைத் தாக்கி அழிக்கும் திறன் கொண்ட ஐஎன்எஸ் காட்மாத் போர்க்கப்பல் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த போர்க்கப்பல் முழுவதும் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டதாகும். அணு ஆயுதம், உயிரி ஆயுதம், ரசாயன ஆயுதம் போன்றவற்றை எதிர்கொள்ளும் வகையில் இந்த கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

---

ஜம்மு காஷ்மீர் முதல்வர் முப்தி முகமது சையது நிமோனியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தார். இவருக்கு நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டவுடன் தனி விமானத்தில் டெல்லிக்கு அழைத்து வரப்பட்டு எய்ம்ஸ் மருத்துவமனையில் சேர்த்தனர். மருத்துவர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்தனர். எனினும் பல்வேறு பிரச்சனைகளினால் பாதிக்கப்பட்ட அவரது உடலில் இரத்த அணுத் தட்டுக்கள் கணிசமாகக் குறைந்தன. இதையடுத்து அவருக்கு செயற்கை சுவாசம் வழங்கப்பட்டு, தீவிர கண்காணிப்புப் பிரிவில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் காலமானார். காஷ்மீரில் பதவியில் இருக்கும்போது இறந்த 2வது முதல்வர் இவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

---

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் சார்சத்தாவில் உள்ள பச்சா கான் பல்கலைக்கழகத்தின் மீது துப்பாக்கிதாரிகள் தாக்குதல் நடத்தியதில் 19 பேர் கொல்லப்பட்டும் 50 பேர் காயமடைந்தும் உள்ளனர். உள்ளூர் நேரப்படி காலை 9.30 மணியளவில் பயங்கரவாதிகள் பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்தப் பல்கலைக்கழக வளாகத்திலிருந்து மாணவர்களும் ஆசிரியர்களும் வெளியேற்றப்பட்டு, காவல்துறை அதை சுற்றிவளைத்துள்ளது. பயங்கரவாதத் தாக்குதல் நடத்தப்படலாம் என்ற அச்சத்தில் பள்ளிகளை மூடுவதற்கு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468, 2377737
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

# பீல் சுதேச ஊழியர் புத்தாண்டு குடும்ப ஆசீர்வாதக் கூடுகை – 2016



பாடல் மற்றும் ஆராதனைவேளை


குடும்பமாக ஆடிப்பாடி தேவனை ஆராதிக்கும் பீல் ஆதிவாசி ஊழியர்கள்




கலாச்சார வரவேற்பு



சிறப்புச் செய்தி : பேராயர். வே. தேவதாஸ் அவர்கள்



பகிர்வு வேளை : சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்கள்


புத்தாண்டு ஆசீர்வாதக் காணிக்கைக்கான சிறப்பு ஜெபம்


சுதேச ஊழியர்கள் வழங்கும் கடலூர் மாவட்ட வெள்ள நிவாரண நிதி


கர்த்தருடைய பந்தி

# ஷாலோம் மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை

சகோ. துல்சிங் பபேரியா – CSI வாழையூத்து வயல் – 20.12.2015



மிஷனெரியின் சாட்சிவேளை



சபைபோதகர் மற்றும் பணியாளர்களுடன் நமது ஊழியர்





மிஷனெரி பிரதிஷ்டைவேளை





மிஷனெரிக்கு அன்பளிப்புகள் வழங்கப்படுகின்றன